UNIVERSITY OF JAFFNA
LIBRARY
20 DEC 2016
PERIODICALS DIVISION

2016 ஒக்டோபர்அணி 12 படை 4
விலை ரூபா 20.00

# செஞ்சக்தி

LIBRARIAN'S OFFICE
RECEIVED
20 DEC 2016
LIBRARY
UNIVERSITY OF JAFFNA

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்

## "நாட்டின் எதிர்காலமும் இடதுசாரிகளின் கடமையும்"




"நாட்டின் எதிர்காலமும் இடதுசாரிகளின் கடமையும்" என்ற தொனிப்பொருளில் யாழ் சங்கானை நகரத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் அநுர குமார திசாநாயக்க தலைமையில் இடம்பெற்ற கருத்தரங்கின் போது

# நிதித்துறையைத் தாரைவார்ப்பதற்குத் தயாராகும் கூட்டரசாங்கம்


சர்வதேச நிதி நிறுவனங்களின் தேவைக்கேற்ப அரசு பொருளாதார நடவடிக்கைகளைக் கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இன்றைய ரணில்-மைத்திரி கூட்டரசாங்கமும் நாட்டின் பொருளாதாரத்தின் கேந்திர நிலையங்களை, வரி அறவிடும் நிறுவனங்களை விற்பதற்கும் அரசியற் தேவைகளுக்கு அடிபணியச் செய்வதற்கும் தயாராகவுள்ளதெனத் தெரியவருகிறது.

பொருளாதாரத்துறையில் அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளை அவதானிக்கும் போது இவ்விடயங்கள் உறுதியாகின்றதெனப் பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். அரசு வரி அறவிடும் நடவடிக்கைகளை திறம்படச் செய்வதற்குப் பதிலாக, வெளிநாட்டு நிறுவனங்களிடம் இப்பொறுப்பை வழங்குவதால் அவர்களுக்கு கமிஷன் என்ற அடிப்படையில் எமது மக்களின் வரிப்பணத்தைச் செலுத்த வேண்டியதோடு, நாட்டின் பொருளாதாரத் துறையின் தரவுகளை வெளிநாடுகள் தம்வசப்படுத்திக் கொள்வதால் நாட்டின் இறைமையும் கேள்வி குறியாகின்றது.

அதேபோன்று இப்போதுள்ள உள்நாட்டு இறைவரிச் சட்டமூலத்தைப் பிரித்து இரண்டு சட்டமூலங்களைக் கொண்டுவருவதற்கு முயற்சிப்பது, அத்துறையைச் சார்ந்த அனைத்து அதிகாரிகளையும் நியமிக்கும் அதிகாரத்தை தம்வசப் படுத்திக் கொள்வதற்கே ஆகும். எனவே இத்துறையும் அரசியல் மயமாவது நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். மறுபுறம் நாட்டுக்குப் பெருமளவு வருமானத்தை ஈட்டித்தரும் சுங்கத் திணைக்களத்தைச் செயலிழக்கச் செய்யும் சட்டமூலத்தைச் சமர்பித்துள்ளது. அரசு சுங்க அதிகாரிகளிடமுள்ள அதிகாரங்களைத் தம்வசப்படுத்திக் கொள்வதற்கும், இத்துறையைச் சார்ந்த குற்றவாளிகளுக்கு வழங்கும் தண்டனையைக் குறைப்பதற்கும் அரசு திட்டமிட்டுள்ளது. புதிய சட்டமூலத்துக்கு அமைய 6 உதவிப் பணிப்பாளர் ஜெனரல்களை நியமிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளதோடு அதில் 3பேர் அமைச்சரவையினால் நியமிப்பதால் அரசியல் தலையீடுகளை செய்யும் சந்தர்ப்பம் இவர்களுக்கு கிடைக்கின்றதாக தொழில் சங்கத் தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

நாட்டின் பொருளாதாரத் துறைக்குப் பாதகமான ரணில்-மைத்திரி கூட்டரசாங்கத்தின் இந்நடவடிக்கைகளுக்கு எதிராக தொழில் சங்கங்கள் இப்போது எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராகவுள்ளனர்.

இந்த அச்சுறுத்தல் இந்நிறுவனங்களுக்கு மட்டும் வரையறுக்க முடியாது, இது இந்த அரசாங்கத்தின் நவலிபரல்வாத பொருளாதாரக் கொள்கையுடன் பின்னிப் பிணைந்துள்ளது. எனவே இப்பொருளாதாரக் கொள்கையை முற்றாக தோற்கடிப்பதனால் மட்டுமே இதனை வெற்றிகொள்ள முடியும் என்றும் அதற்காக பரந்தளவிலான வெகுசன முன்னணியொன்றை அமைப்பதனூடாகவே இதற்கு எதிராகப் போராட முடியும் என இது தொடர்பாக வினவியபோது மக்கள் விடுதலை முன்னணியின் பிரதான செயலாளர் தோழர் ரில்வின் சில்வா செஞ்சக்திக்கு தெரிவித்தார்.





**நீதியான தேசம்! நியாயமான சமுதாயம்! அடிமையில்லா மனிதன்!**

UNIVERSITY OF JAFFNA LIBRARY 2 0 DEC 2016

# ரணில்-மைத்திரி கூட்டரசாங்கம் அரச நிறுவனங்களைக் அழிக்கின்ற அரசாங்கமாகும்!

**மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் தோழர் ரில்வின் சில்வா**



தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் மக்கள் மீது வரிகளை அறவிட்டுக், கள்வர்களுக்கு ஏணியமைத்துக் கொடுக்கும் நிலையுடன், அரச நிறுவனங்களை அழித்துவிடுகின்ற அரசாங்கமெனவும் மக்களை ஏமாற்றுகின்ற அறிக்கைகளை விட்டு மக்கள் கண்களில் மண்ணைத் தூ விவரும் அரசாங்கமெனவும் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் தோழர் ரில்வின் சில்வா (27 செப்) கட்சித் தலைமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார். தொடந்து கருத்துக்களைத் தெரிவித்த அவர்..

இந்த அரசாங்கம் பொய்களைக் கூறி மக்களின் கண்களில் மண்ணைத்தூவி வருகிறது. மக்களை திசைத்திருப்பும் கருத்துக்களைக் கூறி பாரிய வரிச்சுமைகளை ஏற்றிவருகிறது. இந்த அரசாங்கம் மிகவும் அசாதாரனமான முறையில் வற் வரியை 15% ஆல் அதிகரித்தது. நமது நாடு மிகவும் வறிய மக்கள் வாழும் நாடாகும். தேர்தல் காலங்களில் அரசாங்கம் மக்களின் பைகளை நிறப்புவதாக கூறியது. ஆனால் ஆட்சி கிடைத்தப் பின்னர் மக்களின் பைகளைச் சுத்தம் செய்து அமைச்சர்களின் பைகளை நிறப்புகிறது. அரசாங்கத்தின் இந்த அசாதாரண வற் வரிக்கு எதிராக வர்த்தகர்கள் வீதியில் இறங்கிப் போராடினர். மக்கள் விடுதலை முன்னணியும் போராடியது. நமது நாட்டின் மக்கள் தொகையில் அரைவாசிபேர் வறிய மக்களாகும். அவர்கள் சமூர்த்தியை நம்பியே வழுகின்றனர். மக்கள் தொகையில் 43% வீதத்தினர் ஒரு நாளைக்கு இரண்டு டொலருக்கு குறைவான வருமானத்தையே பெறுகின்றனர். அவ்வாறான மக்களிடம் இவ்வாறு வரி அறவிடுவது அநீதியானதாகும்.

நமது நாட்டு நீதிமன்றமும் வற் வரி அசாதாரணமானதென தெரிவித்தது. அவ்வாறு உள்ளபோது அரசாங்கம் மீண்டும் வற் வரித் திருத்ததைப் பாராளுமன்றத்திற்குக் கொண்டடுவரவுள்ளது. இந்த வரிச்சுமையை மக்களால், தாங்கிக் கொள்ள முடியாது. அவ்வாறு இருக்கும்போது அரசாங்கம் மக்களுக்குப் பொய் சொல்கிறது. மக்களின் எதிர்ப்பின் காரணமாக சுகாதாரத்துறைக்கு அறவிடவிருந்த வரியை நீக்கியதாக கூறியபோதிலும் உண்மை அதுவல்ல.

தற்போது பாரிய அறுவை சிகிச்சை செய்து கொள்ள வேண்டிய நோய்களான இருதய நோய், சிறுநீரக நோய், மூளையில் ஏற்படும் பல்வேறுவிதமான நோய்கள் மற்றும் புற்றுநோய் போன்றன அதிகரிதுள்ளன. இலங்கையில் மக்கள் தொகையில் முதியோர் தொகை அதிகரிப்பதினாலும் தவறான உணவு வகைகளை உட்கொள்வதினாலும் இவ்வகையான நோய் அதிகரிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளது. இலங்கையில் முதியோர் தொகை, 1990ல் மக்கள் தொகையில் 8.9% ஆகும் 2000ம் ஆண்டில் 12.2% ஆகவும், 2014ல் 13.4% ஆகவும் அதிகரிதுள்ளது. இந்த வளர்ச்சியினபடி 2026 ஆகும்போது 18.9% ஆக அதிகரிக்குமென எதிர்வு கூறப்படுகிறது. இவ்வாறான நிலையில் இலங்கை அரச மருத்துவமனை சேவைகள் விரிவாக்கப்படாததினாலும், வசதிக் குறைவு காரணமாகவும் பல நோயாளர்களுக்குத் தனியார் மருத்துவ மனைகளை நாடவேண்டியுள்ளது. அதனால் தனியார் மருத்துவமனைகள் அதிகரித்து வருவதுடன் அவைகளில் சிகிச்சை பெறும் நோயாளர்களும் அதிகரித்து வருகின்றனர்.

அவசரமாகச் செய்ய வேண்டிய இருதய அறுவைச் சிகிச்சை, சிறுநீரக சிகிச்சை, மூளை மற்றும் முக்கிய சிகிச்சைகளுக்காக அரச மருத்துவமனைகளில் பல மாதங்களாக வரிசையில் இருக்க வேண்டிய நிலை நோயளர்களுக்கு ஏற்பட்டுள்ளது. அவ்வாறு வரிசையிலிருந்து வரும்போது நோயாளி உயிரோடு இருக்க முடியாது. அதனால் மக்கள் பணம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அவசர அறுவைச் சிகிச்சைகளுக்காகத் தனியார் மருத்துவமனைகளை நாடுகின்றனர். இவ்வாறு வருகின்றவர்கள் பெரும் பணக்காரர்கள் அல்ல. மத்தியதர வர்க்கம் மற்றும் ஏழைகளேயாகும். சிலர் அறுவைச் சிகிச்சைக்காக வீட்டை அடகு வைத்தும், சொத்துகளை விற்றும் பணத்தை தேடுகின்றனர். நாலாபுறமும் கடன்படுவதுமுண்டு. சிலர் வீதியில் இறங்கி பிச்சையெடுக்கின்ற நிலையும் காணப்படுகிறது. இவ்வாறு பணத்தைத் தேடிக்கொண்டு தமது உயிரை காப்பதற்காக வரும் மக்களிடமே அரசாங்கம் 15% வீத வற் வரியை அறவிடுவது அசாதாரண செயலாகும். அது மனித விழுமியங்களுக்கு உரித்தான ஒன்றல்ல.

அரசாங்கம் இவ்விதமாக வரி அறவிடுவது நீதியானதல்ல. அதனால் இந்த அநீதியான வற் வரியைத் தோற்கடிப்பதற்காக மக்கள் விடுதலை முன்னணி அதிகபட்ச பங்களிப்பினைச் செய்யும். அரசாங்கம் பொருளாதாரத்தை முன்னேற்றி உற்பத்தியைப் பெருக்கி வருமானத்தை ஈட்டுவதற்குப் பதிலாக அரசாங்கம் அழுது புலம்பிக் கொண்டிருக்கும் மக்களிடமும் வரி அறவிடுகிறது. இந்த அரசாங்கத்தின் இந் நடவடிக்கைகளைத் தோற்கடித்தாக வேண்டும்.

அரசாங்கம் மக்களின் பைகளில் கைவைப்பதுடன் நிற்காது நாட்டிற்கு வருமானத்தை ஈட்டித்தரும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம் ஆகியவற்றை அமைச்சரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. வரியை வருமானத்தை தேடும் நிறுவனங்களை முகாமைத்துவம் செய்வதற்குப் பதிலாக அவைகளை அரசியல் மயமாக்கி சீரழித்து வருகிறது. இந்த அரசாங்கம் ஏகாதிபத்திய நிறுவனங்களின் சொல்படியே நடக்கிறது. கடந்த காலத்தில் கடன் வாங்கும்போது சர்வதேச நாணய நிதியத்திடம் உறுயளித்திருந்தவாறு நிதித்துறையைத் திறந்துவிடுகிறது. அரச நிறுவனங்களைத் தனியார்மயமாக்கி மக்களுக்கு வழங்கும் மானியங்கள் அனைத்தையும் வெட்டுவதற்காக உறுதியளித்துள்ளது. வற் வரியும் சர்வதேச நாணய நிதியத்தின் தேவைக்கு ஏற்பவே செயற்படுத்துகிறது. உள்நாட்டு இறைவரி, சுங்கம் போன்றத் திணைக்களங்களைச் சிதைப்பது ஏகாதிபத்தியவாதிகளைத் திருப்பதிபடுத்துவதற்காகும்.

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தைப் பலவீனப்படுத்துவதற்குக் கெபினட் தீர்மானம் எடுத்துள்ளது. அதன்படி வருமானத்தை சேகரிக்கும் வேலையைத் தனியாருக்கு ஒப்படைக்கத் தீர்மானித்துள்ளது. வரியைத் தேடுவதைத் துரிதப்படுத்தப் போவதாக கூறி தனியாரிடம் ஒப்படைப்பதாகக் கூறுகிறது. இறைவரித் திணைக்களம் பலவீனமானதென்றால் அதை தனியார் மயப்படுத்துவது தவறான விடயமாகும். தனியார் நிறுவனம் வரி அறவிடும்போது அவர்களுக்கு கமிஷன் வழங்கியாக வேண்டும். பணம் இல்லையெனக் கூறும் அரசாங்கம் மறுபுறத்தில் கம்பனிகளுக்கு கமிஷன் வழங்குகிறது. கம்பனிகளுக்கு கமிஷன் கொடுக்கும்போது அரச அமைச்சர்களும் அதிகாரிகளும் அதிலிருந்து கமிஷன் எடுக்கின்றனர். கடந்த காலம் முழுவதிலும் அரசியல் அழுத்தம் காரணமாக தமக்குச் சார்பானவர்களிடமிருந்து வரி அறவிடுவதற்கு இடமளிக்கவில்லை. நண்பர்களுக்கு சலுகைகள் வழங்கப்பட்டது. அரச அதிகாரத்தைப் பயன்படுத்தி தலையிட்டதன் காரணமாகவே நாட்டிற்கு வருமானம் குறைந்திருக்கிறது. நமது நாட்டில் வரி சேகரிப்பதற்கு வெளிநாட்டவர்களிடம் ஒப்படைக்கின்றபோது அவர்கள் நமது நாட்டில் வரி செலுத்துவோர் யாரென்பதைத் தெரிந்துக் கொள்வார்கள். நமது நாட்டின் பொருளாதாரத் தகவல்கள் வெளிநாட்டு கம்பனிகள் தெரிந்துக்கொள்வது பாதுகாப்பிற்கு ஆபத்தானதாகும்.

தற்போதிருக்கும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் சட்டத்தை மாற்றி மேலும் இரண்டுச் சட்டமூலத்தைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் தயாராகிவருகிறது. இல 10 கொண்ட இறைவரிச் சட்டமூலத்தை நிருவாக சட்டமாக, உள்நாட்டு இறைவரித் சட்டத்தை 2016 ஆக மாற்றப் போகிறது. தற்பேதைய சட்டத்தின் கீழ் இறைவரித் திணைக்கள ஆணையாளரை அமைச்சரவையே நியமிக்கிறது. மற்றைய அனைவரையும் பொதுச்சேவை ஆணைக்குழுவே நியமிக்கிறது. அதில் அரசியல் தலையீடு குறைவு. வரி கட்டுப்பாட்டு 2016 சட்டத்தின் கீழ் சகல அதிகாரிகளையும் நியமிக்கின்ற உரிமையை நிதியமைச்சர் பெற்றுக்கொள்வார். அவர் தமக்குச் சார்பானவர்களை நியமித்துக்கொள்வார். நமது நாட்டின் நிதியமைச்சர் ஒரு வியாபாரியாகும். தனிநபர் ஒருவரிடம் அதிகாரத்தைக் கையளிப்பது நல்லாட்சியல்ல. தொனிப்பொருள் நல்லாட்சியாக உள்ளபோதிலும் இந்த அரசாங்கத்தின் அனைத்து நடவடிக்கைகளும் நல்லாட்சியை இல்லாதொழிக்கும் திசையை நோக்கியே செல்கிறது. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வெளியிலுள்ள ஆட்களைத் திணைக்களத்திற்கு உள்வாங்க முனைகிறது. இதேவேளையில் சட்டத்திற்கு புறம்பாக 1500 பேருக்கு நியமனம் வழங்கப்படவுள்ளது. ஐதேக அரசாங்கம் தமது ஆதரவாளர்களுக்குத் தொழில் வழங்குவதற்கான வழியைத் திறந்துள்ளது. மற்றைய தொழில் வழங்கும் அமைச்சுகள் அனைத்தும் ஸ்ரீ.ல.சுகவிடம் இருப்பதினால் ஐதேகவுக்கு தொழில் வழங்கும் நெருக்கடி தோன்றியுள்ளது.

மறுபுறத்தில் நாட்டிற்கு வருமானத்தைக் கொண்டுவருகின்ற சுங்கத் திணைக்களத்தைப் பலவினப்படுத்தும் புதிய சட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. சுங்க அதிகாரிகளிடமுள்ள அதிகாரத்தைக் குறைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. குற்றவாளிகளுக்குத் தண்டனையைத் தளர்த்தும் நடவடிக்கையும் எடுக்கபட்டு வருகிறது. நாட்டின் வருமானத்தில் 57% பெற்றுத் தருவது சுங்கமாகும். 2014 503 பில்லியன் 2015 719 பில்லியன் சுங்கம் தேடிக்கொடுத்தது.

தொடர்ச்சி 11ம் பக்கம்...

# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னணியின் வெளியீடு
464/20, பன்னிபிட்டிய வீதி, பெலவத்த, பத்தரமுள்ள.
Tel:0112-785612, E-mail niyamuwanews@gmail.com


## நோயாளி இறந்தாலும் வரி கேட்கும் அரசாங்கம்!

"சுகம் வந்தாலும் ஆள் தப்பாது" என்னும் ஒரு பழமொழி தமிழிழ் உள்ளது. தற்போதைய அரசாங்கம் மரணத்தறுவாயில் இருக்கும் நோயாளியிடம் வரி அறவிடுவதற்கு தீமானித்திருப்பதினால், அதை "நோயாளி செத்தாலும் வரி கேட்கும் அரசாங்கம்" என மாற்றியாக வேண்டும்.

அரசாங்கம் கடந்த மே மாதம் முதல் வற் வரி 15% வரையில் அதிகரித்து மக்கள் மீது அசாதாரணமாக வரிச்சுமையை ஏற்றியது. அது சுகாதாரம், கல்வி, பொருட்கள் மற்றும் சேவைகள் பலவற்றிக்கு உரித்தானதாகும். அதற்கு எதிராகப் பாரிய எதிர்ப்புத் தோன்றியதுடன் அதற்கு அரசாங்கத்தால் தாக்குப்பிடிக்க முடியாது போயிருந்தது. சிலர் அதற்கு எதிராக நீதிமன்றம் சென்றனர். அப்போது அவ்வாறு வற் வரி அறவிடுவது தவறானதென நீதிமன்றம் தெரிவித்ததன் பின்னர். சரியான முறையில் வற் வரி அறவிடும்படியும் அது வரையில் வற்வரி அறவிடுவதை நிறுத்தும்படியும் நீதிமன்றம் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியது. மக்கள் எதிர்ப்பின் முன்னால் செயலிழந்துப்போன அரசாங்கம் அதை மறைமுக ஆசீர்வாதமாக ஏற்றுக்கொண்டது. ஆர்ப்பாட்டங்கள் நிறுத்தப்பட்டன. ஆனால் வற் வரி அறவிடப்படுவது நிறுத்தப்படவில்லை. இப்போது அது சரியான வழிக்கு வந்துக்கொண்டிருக்கிறது.


வற் வரி அறவிடுவதற்காக புதிதாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்போகும் வரித் திருத்தத்தில் சுகாதாரச் சேவைக்கு வற் வரி இல்லையென அரசாங்கம் கூறுகிறது. சுகாதார சேவைக்கு வற் வரி அறவிடுவதில்லையென கூறுவதால் வரிக்கு எதிராக மக்களின் எதிப்பினைப் கட்டுப்படுத்த முடியுமென்பது அரசாங்கத்திற்குத் தெரியும். ஆனால் அது முற்றிலும் மக்களைத் திசைதிருப்புகின்ற ஏமாற்றுகின்ற நடவடிக்கையாகும்.

அரசாங்கம் தற்போது தனியார் மருத்துவமனைகளில் 17.5% வருமான வரியை அறவிடுகிறது. அதை மருத்துவமனை உரிமையாளர்களே செலுத்துகின்றனர். ஆனால் வற் வரியை நோயாளியே செலுத்த வேண்டும். அது சிறிய தொகையல்ல. சில நோயாளர்கள் செலுத்தும் வற்வரியினால் மருத்துவமனை வருமான வரி ஈடுசெய்யப்பட்டுவிடும். மருத்துவமனைக்கு இலாபமேயன்றி நஷ்டம் இல்லை.

சாதாரணமாக இலங்கையில் இருதய சிகிச்சைக்காகத் தனியார் மருத்துவமனைகளில் 6,98,000 ரூபாய் அறவிடப்படுகிறது. அதற்கு 15% வற் வரி மட்டும் 1,04,000 ரூபாவாகும் அதன்போது அறுவைச் சிகிச்சைக்கான தொகை 8 இலட்சமாகும். சத்திர சிகிச்சைக்காக 10 இலட்சம் செலவாதுடன் அதற்காக செலுத்த வேண்டிய வற் வரி ஒரு இலட்சம், ஒன்றரை இலட்சம் ரூபாவாகும் நோயாளி தமது உயிரைப் பாதுகாப்பதற்காக வீடு மனைகளை அடகு வைத்து பிச்சையெடுத்துக் கொண்டு வரும், ஒடுக்கப்பட்ட மக்களிடம் அரசாங்கம் இவ்விதமாக வரி அறவிடுவது நியாயமானாதல்ல. அரசாங்கத்திற்கும் அதன் தலைவர்களுக்கு இதயம் என்னும் ஒன்று இருக்குமானால் நேயாளரிடமிருந்து வரி அறவிட மாட்டார்கள். ஆனால் முதலாளித்துவ அமைப்பானது தயவு தாட்ணியமற்ற, நல்லது கெட்டதைப் பற்றி சிந்திக்காதது இவர்களுக்கு அதை சொல்லிக் கொடுப்பது பயனற்ற விடயமாகும். ஏனெனில் முதலாளித்துவ ஆட்சியென்பது இதயமற்ற கொடிய ஆட்சியாகும்.

இந்த நிலமைகளின் கீழ் இந்த அசாதாரண வரிவிதிப்புக்கு எதிராக மக்கள் எழுந்திட வேண்டும். அரசாங்கத்தின் வீண்விரய செலவுகளுக்காக மரணத் தறுவாயிலிருக்கும் நோயாளி வரி செலுத்தத் தேவையில்லை. வற் வரியை அமுல்படுத்துவதை நிறுத்துவதற்கான போராட்டத்திற்கு உயிரூட்டுவதுடன் இந்த இதயமற்ற, நெஞ்சில் ஈரமற்ற, பண்பாடற்ற சமூக முறையைத் தோற்கடிப்பதற்கான போராட்டத்திற்கும் உயிரூட்டியாக வேண்டும். அதைத் தவிர மக்களுக்கு வேறு மார்க்கம் கிடையாது.

## சம்பூர் பிரச்சினையும் மக்களது வெற்றியும்



கடந்த 13-09-2016 இன் தகவல்களின் படி, சம்பூர் அனல் மின் நிலையப் பணிகள் கைவிடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வறிவிப்பானது, மக்களுடன் இணைந்து இந்தத் திடத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்த எம் அனைவருக்கும் மகிழ்ச்சியளிப்பதுடன், இத் திட்டத்திற்கான எதிர்ப்பினை, எம்முடன் இணைந்தும், சுயாதீனமாகவும் வழங்கிய உங்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

திருகோணமலையில் வசிக்கும் ஒரு சில சமூக ஆய்வாளர்கள் மக்கள் விடுதலை முன்னனியின் தலைவர் தோழர் அனுர குமார திசாநாயக்க அவர்களை, பெலவத்தையில் அமைந்துள்ள கட்சித் தலைமயகத்தில் சந்தித்து உரையாடி, சம்பூர் அனல் மின் நிலையத்தின் பாதிப்புக்கள் தொடர்பாக உரையாடி, மகஜர் ஒன்றையும் கையளித்தார். அதன் பின்னர், 2015 ஜூன் மாதம், மக்கள் விடுதலை முன்னனியின் அரசியற் பீட உறுப்பினர் தோழர் லால் காந்த அவர்களின் திருகோணமலை விஜயத்தின் போது சம்பூரிற்கான நேரடி கள நிலவரங்கள் ஆராயப்பட்டு, அதனைத் தொடர்ந்து இந்த விவகாரம் ஊடகவியலாளர் சந்திப்புகளிலும், மேடைகளிலும் மக்கள் விடுதலை முன்னனியினரால் பேசப்படும் ஒரு முக்கிய தொனிப் பொருளாக இடம் பெற்றிருந்தது. இன்னும் விசேடமாகக் குறிப்பிட்டால், எந்தவொரு கட்சியும் இந்த விடயம் தொடர்பாகக் குரல் கொடுக்கத் தவறிய வேளையில், மக்கள் விடுதலை முன்னணி மாத்திரமே தைரியமாகக் குரல் கொடுத்தது.

கிழக்கு மக்களின் குரல் என்றும் அமைப்பானது வெறுமனே சம்பூர் அனல் மின் நிலையக் கட்டுமானப் பணிகளை மாத்திரம் எதிர்க்கவில்லை. எமது எதிப்பானது, மக்கள் இல்லாத காலத்தில் செய்யப்பட்ட சுற்றுச் சூழல் ஆய்வறிக்கையையும், அதனால் மக்களிடம் இருந்து பறிக்கப்பட்ட காணிகளை மீள வழங்குமாறும் வலியுறுத்தப்பட்டது. கடந்த பெப்ரவரி மாதம் 05ம் திகதி, கிழக்கு மக்கள் குரல் அமைப்பு, தோழர் லால் காந்த, சட்டத்தரணி தோழர் ஜானக அதிகாரி மற்றும் சட்டத்தரணி மிஹிரி ராமநாயக்கவுடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடொன்றை மேற்கொண்டது. இந்த முறைப்பாட்டில், சுற்றுச் சூழல் அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மின்சக்தி அமைச்சர், காணி அமைச்சர், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவர் என்போரை பதில் தருனராக உள்ளடக்கி, மக்கள் இல்லாத காலத்தில் செய்யப்பட்ட சுற்றுச் சூழல் ஆய்வறிக்கையினை மீள ஆய்வு செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேலும் மக்கள் சந்திப்புகள் மற்றும் ஊடகவியலாளர் சந்திப்புகளின் மூலம் இந்தப் பிரச்சனை வெளிக் கொண்டுவரப் பட்டது. அண்மையில் வெளிவந்த இந்தச் செய்தி, எதிர்ப்பில் பங்குபற்றிய அனைத்துத் தரப்பினருக்கும் கிடைத்த வெற்றியாகும்.

சம்பூர் அனல் மின்நிலையப் பிரச்சனை வெறும் சுற்றுச் சூழல் பிரச்சினை மாத்திரமல்ல. இது இந்திய வல்லாதிக்கத்தின் பிடிக்குள் சிக்கித் தவிக்கும் மக்களின் பிரச்சனையாகும். ஆகையால் கிழக்கு மக்களின் குரல் அமைப்பின் போராட்டம் இத்துடன் நிறைவடையப் போவதில்லை. இதன் பிரகாரம், புதிதாக வேறேதும் மாற்றீட்டு மின் நிலையத் திட்டங்கள் முன்வைக்கப் படுமிடத்து,

1. புதிய தரவுகளுடன் மீண்டும் சுற்றுச் சூழல் ஆய்வறிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும்.
2. மக்களின் ஜீவனோபாயத்திற்குப் பங்கம் விளைவித்து, மக்கள் தங்கி வாழும் எந்த விதமான காணிகளையும் ஆட்சியாளர்கள் பறிப்பதற்கு நாம் அனுமதிக்கப் போவதில்லை. அதற்கெதிராக, அனல் மின் நிலையத்திற்கு காட்டிய அதே எதிப்பினை நாம் தொடர்ந்தும் ஒடுக்கப்படும் மக்களுக்காக நாம் வெளிக்காட்டுவோம்.

இந்த வெற்றியானது நியாயமான கோரிக்கைகளுடன் போராடிய மக்களுக்குக் கிடைத்த வெற்றியாகும். எனினும் இத்துடன் இந்த மக்களின் பிரச்சனைகள் முடிவடையவில்லை. இன்னும் அரசாங்கத்தின் ஒடுக்கு முறையினால், அருமைத்துரை, கணேசமூர்த்தி, தினேஸ்காந்த் ஆகிய மூவரின் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அனல் மின் நிலையத்திற்கான ஒதுக்கப்பட்ட காணிகள் அவ்வாறே விடுவிக்கப்படாமல் வேலிகளுடன் காட்சியளிக்கின்றன. நிலக்கரி அனல் மின் நிலயத்திற்குப் பதிலாக, எரிவாயு மின்னிலையம் ஒன்று வரப்போவதாக தகவல்கள் கசிந்துள்ளன. எரிவாயு மின்னிலயத்திற்கு 505 ஏக்கர் காணி உண்மையில் தேவை தானா ? அப்படியானால் மக்களின் ஜீவனோபாயத்துடன் தொடர்ந்தும் பிண்ணிப் பிணைந்து காணப்படும் வயல் வெளிகள், புல் வெளிகள், குளங்கள் என்பனவற்றின் நிலை என்ன ? ஆகவே இது நிறைவடைந்த போராட்டமல்ல. யுத்தத்தால் தொடர்ந்தும் தாக்கப்பட்டு, பல அல்லல்களின் மத்தியில் மீளக் குடியமர்ந்த மக்களின் வாழ்க்கை தொடர்பான போராட்டம் ஆகும். வழக்குகள் மீளப் பெறப்பட்டு, காணிகள் விடுவிக்கப்பட்டு, மக்களுக்கு நிரந்தரமான நீதி கிடைக்கும் வரையில் இந்தப் போராட்டம் ஓயப் போவதில்லை. மக்களுடன் மக்களாகக் கிழக்கு மக்களின் குரலும் தொடர்ந்து ஒலிக்கும்.

# தமிழ் எழுச்சியின் பிரதிபலன் என்ன?

தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றில் தமிழ் மக்களை எழுச்சியுறச் செய்து அரசியற் பிழைப்பு நடாத்திய சங்கதிகள் பலவுண்டு. சத்தியாக்கிரகம், ஸ்ரீ எதிர்ப்பு நடாத்தியதில் கண்ட பலன்களையும் அண்மைக்காலத்தில் பொங்குதமிழ் பொங்கியதில் கண்ட பலன்களையும் தமிழ் மக்கள் மீட்டிப்பார்த்து தமிழ் எழுச்சியூடாக என்ன பயன்களை அடையப்போகிறோம் என்று சிந்திக்க வேண்டும். தமிழ் எழுச்சி என்ற அரசியற் கொண்டாட்டத்தின் கதாநாயகனாக வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயா திகழ்கிறார். அவர் தமிழ் மக்களுக்கு கற்பிக்கும் விடயங்கள் ஏற்கனவே தந்தை செல்வா அவர்களாலும், திரு அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அவர்களாலும், கற்பிக்கப்பட்டிருந்தன.

வடக்கு கிழக்கு இணைந்த தாயகம் வேண்டுமென்று தொடக்கிவைத்து அதற்கான ஆயுதப் போராட்டத்தையும் நடாத்தி கட்டிய கோவணத்தையும் இழந்த நிலையைத் தமிழ் மக்கள் மறந்துவிடவில்லை. அதை மறக்க விடாதபடி மீண்டும் தமிழ் பாமர மக்களை தமிழருக்கான வடக்கு கிழக்கு ஆட்சி பற்றிய இனிமையை மீண்டும் மீண்டும் உரைப்பதினால், பாராளுமன்றக் கதிரைகளை பெற்றுக்கொள்வதைத் தவிர பயனேதும் ஏற்படப்போவதில்லை. பாராளுமன்றத்திற்கு கடந்த 68வருடங்களில் எத்தனையோ புதுப்புது முகங்கள் பிரவேசித்திருந்தன. அனேகமானவர்கள் தமிழ் மக்களுக்கு அதிகாரம் வேண்டுமென்றே குரல் எழுப்பியிருந்தனர். பாராளுமன்ற ஆரம்பகாலத்தில் திரு பொன் கந்தையா அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் ஒரேயொரு பிரதிநிதியாகத் தமிழ் மக்கள் சார்பில் பாராளுமன்றம் சென்றிருந்தார். அவர் பாராளுமன்றத்தில் ஆற்றியிருந்த உரையின் பெறுமதியை இன்றைய தமிழ் தேசியவாதிகள் யார் அறிவார்கள்? அவர் தேசிய ரீதியில் தமிழ், முஸ்லிம், சிங்கள பாட்டாளி வர்க்கத்திற்காக குரல் கொடுத்திருந்தார். அன்றைய காலகட்டத்தில் அவரிடம் இழப்பதற்கு ஒன்றுமில்லாத மனிதராக பாராளுமன்றம் சென்றிருந்தார். நோய் காரணமாக இளமைக் காலத்திலேயே மரணித்துவிட்டார். இன்றைய முதலாளித்துவ அரசியல்வாதிகள் சிறிய நோய்க்கும் மருத்துவம் தேடி அமெரிக்காவுக்கு ஓடிவிடுவர். மதவாதத்தையும், இனவாதத்தையும் விதைத்து இப்போதும் கோடிக்கணக்கான பணத்தை சுருட்டும் நிலையில் உள்ளோர் விதைப்பதற்கு இனவாதத்தை தவிர வேறேதும் அவர்களின் கைவசம் இல்லை.

இவை ஒருபுறம் இருக்க நல்லாட்சியென்று சொல்லப்படுகின்ற ஆட்சியினர் சர்வதேசத்தின் நல்லபிள்ளையாக செயற்பட





ஆயத்தமாக உள்ளனர். சர்வதேசத்தின் கதாநாயகன் அமெரிக்கா என்பது எந்தச் சிறுவனுக்கும் விளங்கும். மேற்குலக நலன்களைப் பெற்றுக்கொள்வதற்காக தமிழர் தரப்புடன் இணக்கப்பாட்டை கடைப்பிடித்து உலகத்தை நம்பவைக்கும் செயற்பாட்டில் அரசு இறங்கியுள்ளது. ஓரளவிற்கு தமிழர் தரப்பை திருப்திப் படுத்தும் கருத்துக்களை கக்கி வருகின்றனர். அரசியல் அமைப்பு உருவாக்கத்தில் தமிழருக்கான அதிகாரம் செருகப்பட இருப்பது போன்று சிலருக்குத் தென்படுகின்றது. சிங்கள மக்கள் சந்தேகப்படும் படியான கருத்துக்களை ஒன்றிணைந்த எதிர்கட்சியினர் விதைக்கின்றனர். அதன் பிரதான கதாநாயகன் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆவார். தமிழ் பாமர மக்களுக்கு கிடைக்க இருப்பது என்ன என்பதை பொறுத்திருந்து பார்க்கும் அவகாசம் கூட தமிழ் மக்களுக்குக் கிட்டாது. ஏனெனில் தமிழ் எழுச்சியென்பது நந்தவனத்தின் ஆண்டி தனது பானையை தலையில் வைத்து கூத்தாடி போட்டுடைத்த சங்கதி போல் ஆகிவிடக் கூடும். தமிழ் மக்களைத் தூண்டுவதற்குத் திரு விக்னேஸ்வரன் ஐயா அவர்கள் கூறிய கருத்துக்களில் பிரதானமானது என்னவெனில் தமிழ் மக்கள் வந்தேறு குடிகள் என்று நிரூபிக்கப்பட்டு விட்டால் வடக்கு கிழக்கை இணைக்க கோர மாட்டேன் என்று கூறியிருந்தார். சரித்திர ரீதியாக உலகம் முழுவதிலும் உள்ள வரலாறுகள் ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்குச் சென்று குடியேறிய வரலாறுகளே அதிகமாகும். அதைக்கொண்டு பூர்வீகம் என்று சொல்வது இன்றைய நவீன உலகில் அவசியம் தானா?

கடந்த ஒரு காலகட்டத்தில் விஜய இளவரசனின் வருகையுடன் சிங்களம் பேசும் மக்கள் உருவாகியிருப்பதாக வரலாற்று ஆசிரியர்கள் கூறியுள்ளனர். அதற்கு முன்னர் வடக்கு கிழக்கை தமிழர் ஆண்டனர் என்பது தமிழ் தரப்பினரின் வாதமாகும். தமிழ் மக்கள் தமது பிரதேசங்களை ஆண்டுள்ளனர் என்பது உண்மை யெனில் அவர்களின் காலத்தில் ஆண்டான் அடிமை முறையே உலகம் முழுவதிலும் இருந்துள்ளது. நீதியான ஆட்சியென்று எதுவுமே இருந்திருக்க முடியாது. அப்படியானால் ஆட்சிக்கு எதிராகக் கிழம்பிய எத்தனை அடிமை குடிமைகளை கொன்றொழித்திருக்க கூடும். மிக அண்மையில் ஏற்பட்ட யுத்தத்திற்கு உட்பட்ட காலத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் கொல்லப்பட்ட தமிழ் மக்களுக்கு சமமான அளவில் விடுதலைப் போரில் ஈடுபட்ட இயக்கங்களாலும் தமிழ் மக்களை கொன்று குவித்தது அனைவருக்கும் தெரிந்த கசப்பான உண்மையாகும். தமிழ் மக்கள் இழந்த வாழ்க்கை ஆட்சியுரிமை அற்றதனால் ஏற்பட்டதல்ல. ஆட்சியுரிமை இருந்திருந்தால் நீதியான ஆட்சியை தமிழ் பாமரனுக்கோ ஒடுக்கப்பட்ட மனிதனுக்கோ வாழ்வு மேம்பாடு அளித்துவிடும் என்று எண்ணமுடியாது. சுதந்திரத்துக்கு பின்னரும் முன்னரும் அடிமை குடிமைகள் எப்படி நடத்தப்பட்டனர் அவர்களை ஒடுக்கியே தமது வளத்தை பெருக்கிக் கொண்டனர். காலப்போக்கில் சிங்கள, தமிழ் மேல் ஆதிக்கவாதிகளால் ஒட்டுமொத்த தமிழ், சிங்கள பாமர மக்களும், ஒடுக்கப்பட்டோரும் பாதிக்கப்பட்டனர். சிங்கள மேல் ஆதிக்கத்துக்கு எதிராக போராட வருமாறு எழுக தமிழ் என்னும் பெயரில் அறைகூவல் விடுத்துள்ளனர்.

சரித்திர ரீதியாக அமெரிக்காவில் வெள்ளையர்கள் குடியேறியது 15ம் நூற்றாண்டில் ஆகும். அங்கிருந்த செவ்விந்தியர் என்ற இனத்தையே அழித்துவிட்டனர். தமது பொருளாதார வளத்தை பெருக்குவதற்கு மிசூரி, மிசிசிப்பி நதிகளின் நீர்வளத்தை பெற்றுக்கொண்டனர். அண்மைக் காலத்தில் ஏகாதிபத்திய நாடாக வளர்ச்சி பெற்றது. செவ்விந்தியர் பூர்வீகம் பேசுவதற்கு அவர்கள் உயிருடன் இல்லை. இன்றைய உலகில் நாடற்ற அதிகளவான இனங்கள் உலகில் உள்ளன. யுத்தங்கள் காரணமாக வெளியேறியோர் கூட தத்தமது நாடுகளுக்கு திரும்பிச் செல்ல முடியாத அவல நிலையும் உலகில் உண்டு. நாடு கடந்த தமிழர்கள் கூட திரும்பி வருவார்களா என்பதும் கேள்விக் குறியே? வந்தாலும் அவர்களில் பணவசதி உடையோர் தலைநகரத்திலேயே வாழ விரும்புவர். காலப்போக்கில் இன அடையாளமே இல்லாமற் போய்விடும். ஒருசில புலம்பெயர்ந்தோர் கூச்சலிடுவதைப் வைத்துக் கொண்டு இனத்துவ அதிகாரம் கோருவதால் தமிழ் பாட்டாளி வர்க்கத்தின் பிரச்சினைகள் தீர்ந்துவிடப் போவதில்லை. தமிழரின் பூர்வீகம் என்று தமிழரை எழுச்சியுறச் செய்து சிங்கள இனவாத சக்திகளை எழுச்சியுறச் செய்வதையே வரலாறு முழுவதும் செய்துகொண்டு இருக்கின்றனர். அதை நிறுத்தி பாமர மக்களுக்காக வாழ்வெழுச்சியை ஏற்படுத்துவது பற்றி சிந்திக்க நாம் உங்களை அழைக்கிறோம்.


வடக்கு கிழக்கில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களின் 40சதவீத மக்களுக்கு கழிப்பறைகள் இல்லை. வீடில்லாதோரின் எண்ணிக்கை ஒன்றரை லட்சம் ஆகும். 20சதவீதமானோருக்கு காணியுரிமை இல்லை. 50சதவீதமானவர்கள் வேலையற்றோராகும். இவர்களுக்கான பிரச்சினைகளை தீர்ப்பதற்கான அரசியலே தமிழ் மக்களது தேவையாகும். இடதுசாரித்துவ தலைமைகொண்ட அரசியலின் அடிப்படையில் இந்நாட்டின் அரசியலை இழுத்துச் செல்ல வேண்டும். இனவாத அரசியலை முன்னெடுத்தால் ஐக்கியம் இல்லாத ஒரு நிலை தோன்றும். அதனால் அந்நிய நாடுகளுக்கு அடிமைப்பட நேரிடலாம். தமிழ் மக்களை மீளவைக்க வேண்டும் எனில் அதற்கான மாற்று அரசியற் பாதை மக்கள் விடுதலை முன்னணி காட்டும் பாதையாகும். முதலாளித்துவ அரசியற் தலைவர்களுக்கு இப்பாதையில் பயணிக்க ஒரு போதும் முடியாது. அது அவர்களின் வர்க்க நிலைப்பாடாகும். ஆனால் பாட்டாளி வர்க்கம் இவர்கள் பின்னால் இனிமேலும் செல்வதால் பயனேதும் கிடைப்பதற்கு பதிலாக மீண்டும் அழிவுமிக்க அனுபவங்களை சந்திக்க நேரிடலாம்.

# கூட்டு அரசாங்கத்தின் குழப்பநிலை

கடந்த செப். 04 ஆம் திகதி ஸ்ரீ.ல.சு.க (மைத்திரி அணி) குருணாகலில் தமது மாநாட்டை நடத்தியது. அதில் பேசிய அதன் தலைவரான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, எதிர்வரும் தேர்தல்களில் தாம் தமது 'கை' ('கை' ஸ்ரீ.ல.சு.கவின் தேர்தல் சின்னம்) சின்னத்தில் போட்டியிடப்போவதாகவும், ஸ்ரீ.ல.சு.கவின் ஆட்சியை அமைப்பதே தமது நோக்கமெனவும் அதற்கு நாம் தயாராக வேண்டும் என தெரிவித்தார். அதேவேளையில் செப். 10 ஆம் திகதி பொரளையில் தமது 70 வது வருடாந்த விழாவை நடத்திய ஐ,தே.கவும் எதிர்காலத்தில் ஐ.தே.க ஆட்சியை அமைப்பதற்கு தயாராகும்படி கேட்டது. இக் கூற்றுகள் இரண்டும் பாரிய முரண்பாடுகளைத் தோற்றுவிக்கின்ற அறிக்கையென்பதால் இந்த இரண்டு கட்சிகளினதும் தலைவர்கள் இந்த முரண்பாடுகளைப் பற்றிய தெளிவினை ஏற்படுத்துவதில் தோல்வியடைந்துள்ளனர்.

இந்த முரண்பாட்டுக் குழப்பநிலை என்ன? தற்போது இருப்பது ஸ்ரீ.ல.சு.க-ஐ.தே.க கூட்டு அரசாங்கமாகும். இந்த அரசாங்கத்தை முன்கொண்டு செல்கையில் மைத்திரிபால அடிக்கடி கூறிவரும் விடயம் இந்த அரசாங்கம் கொள்கை அடிப்படையில் உருவானதென்றும் நாட்டைக் கட்டியெழுப்புவதே அதன் நோக்கமென்றும், தொடர்ந்து ஐந்து வருடங்களுக்கு நாட்டை ஆளப்போவதாகவும், அதை வீழ்த்துவதற்கு எவருக்கும் இடமளிக்க போவதில்லையெனவும், ஐந்து வருடத்திற்கு பின்னரும் ஒன்றாக நாட்டை ஆளுவதற்கும் தாம் தயார் என்றும் கூறுகிறார். அதேவேளை ரணில் விக்கிரமசிங்காவும் அடிக்கடி கூறுவதாவது ஜனாதிபதி மைத்திரிபால தலைமையாகக் கொண்டு நாட்டைக் கட்டியெழுப்பும் பணியைத் தொடரப் போவதாகவும், இந்த அரசாங்கத்தை வீழ்த்த முடியாதென்றும், இது கொள்கை அடிப்டையில் நாட்டை ஒன்றாக ஆளும் சிறந்த முன்னுதாரமெனவும் தெரிவித்தார். ஒருபுறத்தில் இவ்வாறான கருத்துக்களைத் தெரிவிக்கும் இவர்கள் இருவரும் மறுபுறத்தில் தாம் தனித்தனியாக அரசாங்கத்தை அமைக்கப்போவதாகவும் கூறி வருகின்றனர்.

இந்த இரண்டு வகையான அறிக்கைகள் பரஸ்பரம் முரணானதாகும். நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு இருக்கும் நல்ல அரசாங்கம் இந்த கூட்டரசாங்கமென்றால், இது நாட்டை கட்டியெழுப்பும் கொள்கை அடிபப்டையில் இருக்குமென்றால், அடுத்தத் தேர்தலில் தனியாக ஸ்ரீ.ல.சு.க ஆட்சி அமைப்பதாக மைத்திரிபாலவும் தனியான ஐ.தே.க ஆட்சி அமைக்கப்போவதாக ரணில் கூறும் கதையும் முரண்பாட்டு நிலையையே காட்டுகிறது. ஐ.தே. கவும் ஸ்ரீ.லசு.க வும் தனித்து ஆட்சி அமைக்க வேண்டுமென்றால், கூட்டு அரசாங்கம் பலனற்றதாக அமைதல் வேண்டும். அப்படியான தற்போதைய கூட்டு அரசாங்கம் தோல்வியடைந்த ஆட்சியாக ஜனாதிபதியும் பிரதமரும் ஏற்றுக்கொண்டதாக அமையும். ஆனால் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை. அப்படியானால் தனிக்கட்சி ஆட்சி



அமைப்பதேன்? அதற்கான பதிலும் கிடையாது. ஒரே தருணத்தில், ஒரே நேரத்தில் கூட்டாட்சியை பாராட்டிப், புகழ்ந்தும் அதை பாதுகாப்பதாகப் பேசும் வேளையில் மறுபுறத்தில் தாங்கள் தனிதனியாக ஆட்சி அமைக்கப்போவதாக கூறுவது நகைப்புக்குரிய விடயமாகும்.

**ரணில் பிரதமராக இருந்தபோதிலும் ஐ.தே.க உறுப்பினர் ஒருவர் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்ளக் கூட முடியாத நிலை தோன்றியுள்ளதென ஐ.தே.க உறுப்பினர் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். அரசாங்கம் மாறியதுடன் ஐ.தே.கவினருக்குத் தொழில் வழங்கும் இ.போ.ச. துறைமுகம், பெற்றோலியக் கூட்டுதாபனம், சமூர்த்தி போன்ற அமைச்சுக்கள் ஸ்ரீ.ல.சு.க வசமே இருக்கிறது.**

இந்த முரண்பாட்டு நிலையானது கூட்டாசியின் இருப்புடன் பின்னிப் பிணைந்துள்ளது. அதுவே தற்போதைய ஆட்சியின் முரண்பாட்டு நிலையாகும். இவ்வாறான கூட்டாட்சி அமைப்பதற்குக் காரணமாக அமைந்துள்ள பல விடயங்கள் உள்ளது. அதில் உள்ளடங்காது இருப்பது கொள்கை அடிப்படையிலான விடயங்களாகும். இந்த அரசாங்கம் பலவீனத்தின் இரண்டு நிலைகளாகும். அதாவது, ஐ.தே.கவுக்கோ ஸ்ரீ.ல.சு.கவுக்கே தனித்து ஆட்சி அமைக்ககூடிய பெரும்பான்மை பலம் கிடைக்காததன் காரணமாக அமைந்தவையாகும். தற்போதைய அரசாங்கம் முரண்பாடுகளின் சேர்க்கையாகும். இந்த கூட்டு அரசாங்கத்தை அமைப்பதற்குப் பல காரணங்கள் உள்ளன. அது முதலாளித்துவ அமைப்பின் கொள்கையுடன் இணைந்து நாட்டை ஆளுவதாகும். இந்த அரசாங்கம் பலவீனமான இரண்டு முகாம்களாகும். அதாவது, ஸ்ரீ.ல.சு.கவுக்கோ ஐதேகவுக்கோ தனித்து ஆட்சி அமைக்க முடியாத நிலையில் உருவாக்கப்பட்டதாகும். 20 வருடங்களாக எதிர்க்கட்சியிலிருந்த தமது தலைமைத்துவத்துவமும் சவாலுக்கு உள்ளாகியிருந்த வேளையில் தற்செயலாகக் கிடைத்த அதிகாரத்தை கைவிடுவதற்கு ரணில் விக்கிரமசிங்கவால் முடியாது. அவர் மைத்திரியின் தலைமையிலான கூட்டாட்சி அமைக்க உடன்பட்டது அதனாலாகும். மைத்திரியின் பக்கமிருந்து பாக்கின்றபோதும் அவருக்கு அதைத் தவிர வேறு மாற்று வழி கிடையாது. அரச அதிகாரத்தில் அவர் பங்கேற்காவிட்டால் அவரது ஜனாதிபதி பதவி அதிகாரமற்றதாக அமைவதுடன் மறுபுறுத்தில் ஸ்ரீ.ல.சு.க தலைமைத்துவத்தை தமது கையில் வைத்திருக்க முடியாது போகும். தற்போது ஸ்ரீ.ல.சு.க தலைமைத்துவம் தமது கையில் இருப்பதுவும் உயர்மட்ட உறுப்பினர்கள் அவருடன் இருப்பதுவும், கூட்டாட்சியில் இணைந்து தம்மைச் சுற்றியிருப்பவர்களுக்கு அமைச்சுப் பதவி சலுகைகளை வழங்கியிருப்பதுவும் பிரதான காரணங்களாகும். அதிகாரம் இல்லாவிட்டால் இவர்கள் அனைவரும் மைத்திரியை விட்டு அகல்வது தவிர்க்க முடியாததாகும். அதனால் குருடனும் முடவனும் என்னும் நாடகத்தைப் போன்று மைத்திரி - ரணில் இருவருக்கும் தமது அதிகாரத்தை பாதுகாப்பதற்கான அதிகாரத்தின் நிமித்தமாக ஒன்றாக ஆட்சிசெய்வதற்கு நிர்பந்திக்கப்பட்டுள்ளது. பல்வேறு முரண்பாடுகளின் மத்தியில் கூட்டு அரசாங்கம் இருப்பின் உண்மைநிலை அதுவாகும்.

அது அவ்வாறென்றால் வேறு அரசாங்கத்தை அமைப்பதற்கு அழைப்பு விடுப்பதேன்? இந்த இரண்டு தலைவர்களும் தாங்களது அரசாங்கத்தை அமைக்கப்போவதாக கூறுவது அங்கத்தவர்களைத் திருப்திபடுத்துவதற்காகும்.

மைத்திரிபால ஸ்ரீ.ல.சு.கட்சியின் உத்தியோகபூர்வ தலைவரென்றாலும் கீழ்மட்ட உறுப்பினர்களின் விருப்பத்தைப் பெற்றுக்கொள்ளத் தவறிவிட்டார். கடந்த ஐ.ம.சு.கூட்டமைப்பின் ஆட்சியைத் தோற்கடிப்பதற்கு ஐ.தே.க.வின் உதவியோடு செயற்பட்டார் என்றே ஸ்ரீ.சு.கட்சி அங்கத்தவர்கள் கருதுகின்றனர். அதேபோன்று இப்பொழுதும் ஐ.தே. கவுடன் கூட்டுச் சேர்ந்து நாட்டை ஆளுவதால் ஸ்ரீ.ல.சு.கவை ஐ.தே.கவுக்கு விற்றவராகவே மைத்திரியைக் கீழ் மட்ட உறுப்பினர்கள் பார்க்கின்றனர். இது மேலும் உக்கிரமடைவதற்கான காரணம் மகிந்த அணியினர் இந்தக் கருத்தினைக் அடிக்கடி வெளியிடுவதினாலாகும். அதனால் தாம் சுத்தமான ஸ்ரீ.ல.சுகட்சிகாரர் என்றும், தாம் ஸ்ரீ.ல.சு.கட்சியின் ஆட்சியை அமைப்போம் என்றும் உரத்துக் கூற வேண்டிய நிலை மைத்திரிக்கு ஏற்பட்டுள்ளது. அவ்வாறில்லாவிட்டால் மைத்திரி அங்கத்தவர் இல்லாத தலைவர் என்று ஆகிவிடும். அது சரியாக இராணுவமில்லாத ஜெனரல் ஒருவரின் நிலைக்குத் தள்ளப்படுவதற்கு சமமாகும். அடுத்து வரும் தேர்தல்களில் ஸ்ரீ.ல.சு.க "கை" சின்னத்தில் போட்டியிடப்போவதாக தெரிவிப்பது தாம் உண்மையான ஸ்ரீ.ல.சு.காரர் என்பதைக் காட்டுவதற்காகும். 1977ன் பின்னர் இடைத் தேர்தலில் மட்டும் பயன்படுத்திய கைச்சின்னம் அதன் பின்னர் பயன்படுத்தப்படாத ஸ்ரீ.ல.சு.க அங்கத்தவர்களுள் மறந்து போயிருக்கின்ற "கை" சின்னத்தை மைத்திரி கையில் எடுப்பது மகிந்தவைவிட தான் ஸ்ரீ.ல.சு.கட்சி காரன் என்பதைக் காட்டுவதற்காகும். அதனால், மாத்திரம் மைத்திரியின் நிலைமை நல்ல நிலைக்கு மாறிவிடும் என்று கருதிவிட முடியாது. எவ்வாறாயினும் இந்த நெருக்கடியின் காரணமாக மைத்திரிபாலாவுடன் இணைவதற்கும் கூட்டு அரசாங்கத்ததைப் பாதுகாப்பதற்கும் ஸ்ரீ.ல.சு.க ஆட்சி அமைக்கப் போவதாக கூறுகின்ற நிலைமையானது நகைப்புக்குரிய விடயமாக மாறியுள்ளது.

ஐ.தே.கவும் இதேபோன்றதொரு நெருக்கடியிலே வீழ்ந்துள்ளது. ஐ.தே.க கூட்டரசாங்கத்தின் பிரதான பங்காளி என்றாலும் அதற்கு முழுமையான அதிகாரம் கிடைக்கவில்லை. அரைவாசி

தொடர்ச்சி 11ம் பக்கம்...

# அரசியலில் மனச்சாட்சியும் நேர்மையும் யாரிடம் உண்டு


இலங்கை அரசியல் வரலாற்றில் நேர்மையும் மனச்சாட்சியும் என்ன விலை என்று நோக்குதல் அவசியமாகிறது. பணத்தை எப்படிச் சம்பாதிக்கலாம் என்று சிந்திக்கும் அரசியல்வாதிகளே நாட்டை ஆண்டு வந்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சியானால் என்ன? சிறீலங்கா சுதந்திரக் கட்சியானால் என்ன? இரு கட்சிகளிலும் இருந்தவர்கள் அன்றிலிருந்து இன்று வரை நிதிமோசடியிலேயே செயற்பட்டு வந்துள்ளனர். இந்த இரு ஆட்சியாளர்களுடன் கூட்டுச் சேர்ந்த பங்காளிக் கட்சிகளும் சொத்து மோசடிகள் பணமோசடிகளில் ஈடுபட்டதான வழக்குகளும் அன்றிலிருந்து இன்று வரை நடைபெறுகின்றன.

இருப்பினும் ஆளும் வர்க்கத்தின் எந்தக் கட்சியினராயினும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் சட்டங்களை ஆக்கி வைத்துள்ளனர். எனவே நீதி, நேர்மை இந்நாட்டில் என்ன விலை என்று கேட்கத் தோன்றுகிறது. சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் வயது 67, ஐக்கிய தேசியக் கட்சியின் வயது 70 என இருபகுதியினரும் தத்தமது பூர்த்தி விழாக்களைக் கொண்டாடினர். இருபகுதியினரும் தத்தமது ஆட்சிகளின் மேன்மைகளைப் பற்றிப் புளுகித்தள்ளினர். கடந்த மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பினரின் ஒருபகுதியினரும் ஐக்கிய தேசியக் கட்சியினரும் ஒன்று சேர்ந்து ஆட்சியமைத்திருந்தாலும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சியொன்று 56 பேருடனான மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் ஆட்சிக்கு அச்சுறுத்தலாகச் செயற்படுகின்றனர்.

அவர்கள் எதற்காக ஒன்றிணைந்துள்ளனர் என்பதை நாட்டு மக்களனைவரும் அறிவர். அவர்கள் தூக்கியிருக்கும் பிரதான ஆயுதங்கள் இனத்துவம் மற்றும் ஏகாதிபத்திய எதிர்பார்ப்பு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைப் பிழவடையச் செய்தமை ஆகியனவாகும். பண்டாரநாயக்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை அமைத்தபோது இருந்த இனத்துவ மேலாதிக்கத்தை வலியுறுத்திப் பதவியேற்றவராவார். ஆட்சியின் போது சிலசீர்திருத்த நடவடிக்கைகளை எடுத்திருந்தார். அப்போது மக்களுக்கு பயனுடையதாக விருந்தவிடயங்களும் இருந்துள்ளன. தேசிய முதலாளித்து வளர்ச்சியும் ஆரம்பித்திருந்தது. மக்களிடம் கட்சிவேரூன்றியது. அவரைத் தீர்த்துக்கட்டியதில் மதவாதம் இனவாதம் ஆகியன பங்காற்றியிருந்தன. ஸ்ரீமாவோஅம்மையாரின்

> **பாராளுமன்றத்தில் ஆறு உறுப்பினர்களுடன் செயற்பட்டாலும் முதலாளித்துவ ஆட்சியாளர்களை அம்பலப்படுத்தும் கட்சியும் இதுவாகும். பொய், புரளி எதுவும் இவர்களிடம் கிடையாது.**

தலைமையை மக்களுக்கெதிராகத் திசைதிருப்பி டட்லிசேனநாயக்க 1965ல் பதவியேற்றார். அவரும் அரசைக் கொண்டிழுக்க முடியாமல் வங்குரோத்தாக்கினார். அதன்பின்னர் ஸ்ரீமாவோ அம்மையார் ஆட்சிப் பொறுப்பேற்றார்.



இப்படி மாறிமாறி இருகட்சிகளும் இந்நாட்டை ஆட்சிபுரிந்து கடன்சுமையை மக்கள் மீது சுமத்தியுள்ளனர். இப்போது இருகட்சிகளும் ஒன்றுசேர்ந்து தத்தமது பூர்த்தி விழாக்களில் கடன் சுமையைக் குறைப்போம் என வாக்குறுதியளித்துள்ளன. இவர்கள் தேர்தலின்போதும் அளித்தவாக்குறுதிகள் என்ன என்பதை மக்கள் நன்கறிவர். இந்த இரு கட்சிகளிடமும் பொருளாதார வங்குரோத்து நிலை காணப்படுவதால் மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் தம்மிடம் ஏதோ முற்போக்கான கொள்கைகள் இருப்பது போன்று குரலெழுப்பி வருகின்றனர். தமது ஆட்சியின் போது புதியசட்டங்கள் ஆக்குவதற்கு யு.என்.பியிலிருந்தே சிலரை வாங்கி மூன்றில் இரண்டு பலத்தைப் பெற்றுக் கொண்டார்கள். இப்போது இந்த ஆட்சியாளர்களை விமர்சிப்பது எதனால் என்பது புரியாதவிடயமல்ல. புதிய

அரசியல் யாப்புச் சீர்திருத்தத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் திருப்திப்பட்டால் ஆட்சிக்கு வலுச்சேர்ந்துவிடும். அதனால் முன்கூட்டியே சிங்கரத்தம் உடையவர்களை அணிதிரட்டும் வேலையை மேற்கொண்டுள்ளனர்.

1977ல் ஜே. ஆர் ஆட்சிக்கு வந்தவுடன் பலசட்டச் சீர்த்திருத்தங்களை மேற்கொண்டார். அதில் குற்றவியல் நீதி ஆணைக்குழுவும் ஒன்று. கடந்த ஸ்ரீமாவோ அம்மையாரின் ஆட்சிக்காலத்தில் பணமோசடியில் பலர் அகப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் மிகமுக்கியமான புள்ளிகளில் சீலவதி சதானந்தன் தம்பதிகளும் அடங்குவர். சீலாவதி டி.எஸ் சேனநாயக்கவின் மகளாவார். மகாவலி அபிவிருத்தியின் முதற்கட்ட வேலை செக்கோஸ்லாவாக்கியாவின் கம்பனியிடம் கையளிக்கப்பட்டிருந்தது. வெளிநாட்டுக்கான பணநோட்டுக்களை உள்நாட்டுப் பணத்தைக் கொடுத்து மாற்றியிருந்தவிடயம் அம்பலத்துக்கு வந்தது. உளவுப்பிரிவினர் கையும் மெய்யுமாகப் பிடித்து இவர்களைச்

# முன்னாள் இந்திய திரைப்பட நடிகரின் கோரிக்கை

இம்மாத ஆரம்பத்தில் இந்தியாவின் கர்நாடக மாநிலத்திலிருந்து தமிழ் நாட்டுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்ட விவகாரத்தால் கர்நாடக மாநில மக்கள் கொதிப்படைந்து அங்கு வாழ்ந்துவந்த தமிழ் நாட்டு மக்களுக்கு எதிராக வன்முறையில் ஈடுபட்டதால் பலர் கொல்லப்பட்டும் உடமைகளுக்குச் சேதம் ஏற்பட்டும் கோடிக்கணக்கான நட்டத்தையும் ஏற்படுத்தியதான தகவல்கள் வெளிவந்துள்ளன. இந்த விவகாரம் உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு அமைய நீர் திறந்து விடப்பட்டதாக அறியக்கிடக்கின்றது. உலகில் பல நாடுகளில் நீர்பங்கீடு நடைமுறை சார்ந்த விடயமாக உள்ளது. ஒரே நாட்டுக்குள் உள்ள மக்கள் தண்ணீரை பங்கிடுவதில் ஒற்றுமையின்மையானால் வேறுபல பெரிய விடயங்களில் எப்படி ஒற்றுமை பேணப்படும் என்ற வினா எழுவது இயல்பானது.

இந்திய வரலாற்றில் இனரீதியான பகமை காரணமாக கலவரங்கள் ஏற்படுவதுண்டு அதனால் மக்களின் உயிரிழப்புக்கள் உடமைகள் அழிப்புகள் சர்வ சாதாரணமாக இடம்பெற்ற சங்கதிகள் ஆகும். ஒவ்வொரு மாநிலங்களிலும் பல்வேறு இனத்தவர், மதத்தினர் வாழ்ந்து வருகின்றனர். அவர்களிடையே பரஸ்பர புரிந்துணர்வு ஒற்றுமை காலத்துக்குக் காலம் சிதைவடைவது வழக்கமாகி விட்டது. அதிலொன்றுதான் கர்நாடக நீர்ப்பிரச்சினையாகும். தமிழர் பிரதேசத்துக்கு நீர் திறந்து விட்டால் தமது மாநிலத்துக்கு தண்ணீர் குறைவடைந்து விடும் என்பது அவர்களின் கணிப்பாகும். அது சம்பந்தமாக மக்களுக்கு தெளிவூட்ட அரசியல் வாதிகளும் புத்திஜீவிகளும் தவறிவிட்டனர். பல லட்சக்கணக்கான தமிழ் மக்கள் கர்நாடகாவில் வாழ்ந்து வந்தனர். மக்கள் இப்போது அகதிகளாகத் தமிழகம் திரும்பியுள்ளனர். அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க கர்நாடக அரசு தவறிவிட்டது. இது ஒரு புறம் இருக்க தமிழகத்தை ஆண்டு வந்த முதலாளித்துவ தமிழ் திராவிட ஆட்சிகள் தமது பிரதேச நீர் வளத்தை பாதுகாக்கத் தவறிவிட்டனர். இக்குற்றச் சாட்டு இப்போது எழுந்துள்ளது. அங்கேயும் ஊழல், மோசடிகள் நிரம்பி வழிகின்றன. எத்தனையோ நீர் நிலைகள், குளங்கள் காணாமற் போயுள்ளதாகவும் கூறப்படுகிறது. தனியாரின் கட்டுப்பாட்டில் சில குளங்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது. முன்னாள் திரைப்பட நடிகர் சிவகுமார் அவர்கள் புதிய யோசனை ஒன்றை மத்திய அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளார். அதாவது விண்ணிற் செலுத்தும் ரொக்கெட்டுகளுக்குச் செய்யும் செலவை நிறுத்தி வீணாக கடலுக்குச் செல்லும் நதிகளின் நீரை திசைதிருப்பி தமிழகத்துக்கு வழங்குமாறு கோரியுள்ளார்.

1966ம் ஆண்டு சீனாவில் இரு பெரும் நதிகள் தான் உலகில் முதன்முதலாக இணைக்கப்பட்டன. அவ்வாய்க்கால்களில் வெட்டியெடுக்கப்பட்ட மண் உலக நிலப்பரப்பில் ஒரு அடி உயரத்துக்கு போடக் கூடியதென அப்போது கணிக்கப்பட்டது. அதை சாத்தியமாக்க அங்குள்ள அரசியல் வழிகாட்டல் காரணமாய் இருந்தது. வீணே கடலுக்கு அடித்துச் செல்லப்படும் நீரை மக்கள் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் கையாளாத அரசுகள் தான் இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் ஆட்சி நடாத்துகின்றனர். எமது நாட்டில் மகாவலி கங்கையை வடக்கு நோக்கி திருப்புவதற்கு 1972ல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அரை நூற்றாண்டை எட்டும் காலமளவிலும் முடிக்கப்படாமல் உள்ளது. சிலவேளை கர்நாடகாவின் நிலமை இங்கேயும் ஏற்பட்டு விடும் என்ற எண்ணமோ தெரியவில்லை. ஏனெனில் வேறு பிரச்சினைகளால் அத்தகைய கலவரங்களை எமது நாடும் சந்தித்து இருந்தது.

ஆட்சியினரின் தூர நோக்குடைய செயற்பாடுகள் பொதுவாக வரிய நாடுகளுக்கு இன்றியமையாதது. எமது நாட்டிலும் வடபிரதேச நீர்வளம் இன்னும் 20வருடங்களில் வற்றிப் போகும்

## மையும்

சிறையிலடைத்தனர். குற்றவியல் நீதி ஆணைக்குழுவைக் கலைத்ததனால் இவர்கள் தப்பிக் கொண்டது ஒருசிறிய உதாரணமாகும்.

இப்படியாகத் தப்பிக் கொள்ளக் கூடிய சட்டங்கள் அல்லது சட்டச்சீர்திருத்தங்கள் ஆகியன மேட்டுக்குடியினரைத் தப்பவைக்கின்றன. இப்போதும் குற்றவியல் நீதி ஆணைக்குழு செயற்படுகிற போதிலும் இன்னும் மந்தகதியிலேயே செயற்படுகிறது. குற்றவாளிகள் காப்பாற்றப்படுவார்களா? தண்டனை வழங்கப்படுமா? என்பதை மக்கள் உன்னிப்பாக அவதானிக்கின்றனர். குற்றவாளிகள் தப்பிக் கொள்ளவேண்டுமெனில் அடுத்ததேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றுவதுதான் ஒரேமார்க்கமாகும். அதற்காக இப்போதிருந்தே மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தாம் தீர்ப்போம் என்றும் மேலும் இனத்துவக் கருத்துக்களையும் கக்கிவருகின்றனர். சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களும் மிக அவதானமாகச் செயற்படுதல் இன்றியமையாதது.

இன்றைய காலகட்டத்தில் நீதி, நேர்மை, மனச்சாட்சி இவைகளைக் கொண்ட கட்சி மக்கள் விடுதலை முன்னணியாகும். பாராளுமன்றத்தில் ஆறு உறுப்பினர்களுடன் செயற்பட்டாலும் முதலாளித்துவ ஆட்சியாளர்களை அம்பலப்படுத்தும் கட்சியும் இதுவாகும். பொய், புரளி எதுவும் இவர்களிடம் கிடையாது. நாட்டின் பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் குரலை வெளிப்படுத்தும் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியே. இதனை மக்கள் நன்கு உணர்ந்து கொள்ள வேண்டும். கடந்த 68 வருடங்கள் விட்ட பிழையை இனிமேல் மக்கள் விடக்கூடாது.

## க்கை

ஏதுநிலை உள்ளதென்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். மிக அண்மைக் காலமாக போத்தலில் அடைக்கப்பட்ட நீர் பாவனைக்கு பழக்கப்படுத்தப்பட்டுள்ளது. மென்பானங்களில் விலையுடன் ஒப்பிடும் போது தண்ணீரின் விலை அவ்வளவு பெரிய வித்தியாசம் இல்லாத அளவுக்க கம்பனிகள் இலாபத்தை ஈட்டுகின்றன. இது காலப்போக்கில் தென்னிந்திய "வோட்டர் பொற்றில்" என்ற தமிழ் சொல்லாக இங்கும் பிரபலமாகும் நிலை ஏற்படலாம்.

திரைப்பட நடிகர் சிவகுமார் அவர்களே தங்கள் நாட்டின் பிற்போக்கு அரசியல் வாதிகளுக்கு தாங்கள் விடுத்திருக்கும் கோரிக்கைகளை மக்கள் நலன் சார்ந்த போராட்டமாக முன்னெடுப்பீர்களாக தமிழ் நாட்டின் நீர் வளத்தை பெருக்க இரண்டு ஆறுகளை இணைக்கும் யோசனையை சோஷலிச நாடொன்றில் முன்வைத்திருந்தால் சாத்தியப்பட வாய்ப்புண்டு.

# இனவாதத்துக்கு பதிலாக
# இன ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம்!





தோல்விகண்ட ராஜபக்ஷ கும்பல் தமது அரசியல் காய்நகத்தலின் ஒரு கட்டமாக தென்பகுதியில் சிங்கள இனவாதத்தை பரப்பிவருவதை அவதானிக்க முடிகின்றது. அதற்கு மையப்பொருளாக கொண்டது வடபகுதியல் மீண்டும் புலிகள் தரப்பு தலைதூக்கி வருவதாகவும், மீண்டும் இந்நாட்டில் பிரிவினைவாதச் செயற்பாடுகள் நடந்துக் கொண்டிருக்கின்றதாகவும் பலத்த குரலில் கூறுகின்றார்கள். 30வருட யுத்தத்துக்கு முகம் கொடுத்த தமிழ் மக்களே அந்த யுத்தத்தின் கொடூரத்தை அனுபவித்தார்கள். உயிர்கள், உடமைகள், உடன்பிறப்புகளை இழந்தார்கள். ஒட்டு மொத்த தமிழ் சமூகமே பல தசாப்தங்களுக்கு பின்நோக்கிச் சென்றுள்ளது. இவற்றுக்கெல்லாம் முகம்கொடுத்த வடக்கு கிழக்கு மக்களின் உண்மையான எதிர்பார்ப்பு அப்படி இல்லாமலிருக்கின்ற போதும், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்விகண்ட மகிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட கும்பல் மற்றும் முதலாளித்துவ ஆட்சியாளர்கள் மீண்டும் தமிழ் இனவாதச் சக்திகள் தலைதூக்குவதையே விரும்புகின்றார்கள்.

அத்தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் இன்று வடபகுதி முதலமைச்சர் உள்ளிட்ட தேர்தலில் தோல்விகண்ட ஒருசில அரசியல் தலைவர்கள் சில நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர். சாதாரண தமிழ், முஸ்லிம் மக்களுக்கு மொழிப்பிரச்சினை, உரிமைப்பிரச்சினை, ஜனநாயகப் பிரச்சினை உள்ளதென்பது யாரும் மறுக்க முடியாது ஆனால் அவற்றை சுட்டிக்காட்டிக் கொண்டு தத்தமது அரசியல் நோக்கங்கங்கை பூர்த்திசெய்து கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாமல் உள்ளது. தமக்கு கிடைத்த முதலமைச்சர் பதவியைக் கொண்டு சாதாரண மக்களுக்கு என்ன செய்தார் என்று கேள்வி எழுகின்றபோது, மாகாண சபையின் மக்கள் பணத்தை மோசடி செய்துள்ளார் என்று வடமாகாணத்தின் எதிர்கட்சித் தலைவர் அவர்கள் குற்றம்சுமத்தும் நிலையில், மக்களது விருப்புப் படிப்படியாகக் குறைவடைந்து வருவதை மீண்டும் பெற்றுக்கொள்ளும் நோக்கில் செயற்படுவதை இந்நாட்டு முற்போக்கு சக்திகள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டார்கள். மறுபுறம் இவ்வாறான செயற்பாடுகள் மீண்டும் இந்நாட்டின் ஆட்சியதிகாரத்தை கௌவிக் கொள்வதற்காக மோப்பம் பிடித்துக்கொண்டிருக்கும் ராஜபக்ஷ கும்பலுக்கே சாதகமாக அமைகின்றது. மறுபுறம் இன்றைய ரணில் - மைத்திரி கூட்டரசாங்கமும் முன்னைய மகிந்த ராஜபக்ஷ ஆட்சியை விமர்சிப்பதை விடுத்து இப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதாகத் தெரியவில்லை.

தமிழ் மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளை நிரந்தரமாகவும், உண்மையாகவும் தீர்க்க வேண்டுமானால் அதற்குத் தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவது இன்றியமையாததாகும். வடக்கு கிழக்கு உள்ளிட்ட அனைத்துத் தமிழ், முஸ்லிம் மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளைத் தென்பகுதியில் வாழும் சிங்கள மக்கள் உணர வேண்டும். அதற்காக வடக்கையும் தெற்கையும் இணைக்கும் உறவுப் பாலமொன்றை கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. அந்நோக்கத்தைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக மக்கள் விடுதலை முன்னணி தொடர்ந்தும் நடவடிக்கையெடுத்து வருகின்றது. அதற்கேற்பவே "சகோதரத்துவ தினம்", கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், கூட்டங்கள் போன்றவற்றை வடக்கு, கிழக்கு பகுதியில் நடாத்தி வருகின்றோம். அதன் ஒரு கட்டமாகவே கடந்த செப்டெம்பர் 17ம் திகதி யாழ்ப்பாணத்தில் வரலாற்று முக்கியம் வாய்ந்த ஒரு நகரமான சங்கானை நகரத்தில் ஓர் கருத்தரங்கை ஏற்பாடு செய்திருந்தோம். இதில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் அநுர திசாநாயக்க பிரதான சொற்பொழிவை ஆற்றினார். மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினரும் யாழ் மாவட்ட அமைப்பாளருமான தோழர் இ. சந்திரசேகர் உள்ளிட்ட பலர் இச்சந்தர்ப்பத்தில் உரையாற்றியதோடு யாழ்ப்பாணத்தின் முன்னாள் இடதுசாரி அமைப்பைச் சேர்ந்தவர்களும் இதில் கலந்துகொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

# ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராளி... 'சே' அவர்கள்



தமது நடைமுறையில் காட்டிய புரட்சிகர எடுத்துக்காட்டுகள் காரணமாக இன்று உலகளவில் இளம் புரட்சியாளர்கள் தமது உதார புருஷராக "சே" அவர்களை ஏற்றுக்கொண்டுள்ளார்கள். முதலாளித்துவச் சமுதாயத்தை மாற்றியமைப்பதும் ஏகாதிபத்தியத்தை தோற்கடிக்கும் பயணமும் ஒன்றோடொன்று சேர்ந்திருக்கின்றது. தமது உயிரையும் துச்சமென நினைத்துத் தம்மால் முடிந்த உயர்ந்தபட்ச போராட்டத்தை இதற்காக ஆற்றியிருக்கிறார். இன்றைய முதலாளித்துவ சமுதாயமென்பது ஏகாதிபத்தியத்தால் வழிநடாத்திச் செல்லும் ஒன்று என அதனை துள்ளியமாக அவதானிப்போருக்கு கண்கூடாகத் தெரிகின்ற ஓர் உண்மையாகும். எனவே முதலாளித்துவ முறையை மாற்றியமைப்பதற்கு போராடும் எவராக இருந்தாலும் அதனை ஏகாதிபத்தியத்துக்கு எதிரான ஒரு போராட்டமாக முன்னெடுக்க வேண்டும். எனவே "சே" அவர்களின் எடுத்துக்காட்டுகள் இன்று எமக்கு இன்றியமையாதவையாகும்.

1950 தசாப்தத்தில் ஆரம்ப பகுதியில் மோட்டார் சைக்கிலில் லத்தீன் அமெரிக்கா முழுவதும் பயணித்த அனுபவங்கள் அவரது வாழ்க்கையின் திருப்பு முனையாகியது. மெக்சிகோவுக்குச் சென்றபோது ராவுல் காஸ்திரோ, பிடல் காஸ்திரோ போன்றோரை சந்தித்தார். பிடல் காஸ்திரோ உள்ளிட்ட கியூப தோழர்கள் முன்னெடுத்த போராட்டத்தை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டு அப்போராட்டத்துடன் அவர் இணைந்து கொண்டார். எனவே கியூப புரட்சியில் நடந்த கெரில்லா போராட்டில் முன்னுதாரணமான போராளியாகத் தமது பணியை மிகவும் சிறப்பாக ஆற்றினார். அவரது துணிச்சலும், போராட்டத்தில் முதன்மையாளராக போராடியதும் அவரை மேலும் மேலும் ஓர் போராளியாக உறுதியாக்கியது. அவரது திறமைகள், எடுத்துக்காட்டுகள் காரணமாக 29வது வயதிலேயே கெரில்லாப் படையின் உயர் பதவியான மேஜராக அவர நியமிக்கப்பட்டார். கியூப புரட்சிக்காக அவர் எவ்வளவு பங்காற்றினார் என்பது கியூப மக்கள் நன்கறிந்ததோடு இன்றும் அவர்களது மனங்களில் அது பதிவாகியிருக்கின்றது.

கியூப புரட்சியின் வெற்றியின் பின்பு "சே" அவர்களுக்கு கியூப அரசாங்கத்தின் பல பதவிகள் வழங்கப்பட்டது. அவை ஹவானாவின் இராணுவ பொறுப்பதிகாரியாகவும், காணி சீர்திருத்த திணைக்கள மற்றும் கைத்தொழில் சபையின் பணிப்பாளராகவும், தேசிய மத்திய வங்கியின் தலைவராகவும், பொருளாதார ஆலோசகராகவும் பதவிவகித்தார். ஒருமுறை சோஷலிச கியூப ஆட்சிக்கு ஒருவருடம் பூர்த்தியாகும் சந்தர்ப்பத்தில் ஐக்கிய அமெரிக்க ஆக்கிரமிப்பு இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் அதற்கெதிராக "சே" அவர்கள் தலைமை தாங்கி நடாத்தப்பட்ட போராட்டத்தினால் ஐக்கிய அமெரிக்கப் படையினர் முற்றாக விரட்டியடிக்கப்பட்டனர். இது லத்தீன் அமெரிக்காவில் ஐக்கிய அமெரிக்கா முகம்கொடுத்த முதன்முதல் தோல்வியாகும்.

ஐக்கிய அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியில் மிகவும் இக்கட்டான சூழலிலும் "சே" அவர்கள் கைத்தொழில் அமைச்சராக சோஷலிசத்தை கட்டியெழுப்பும் பணியை பல்வேறு சிறப்பாக முன்னெடுத்தார். தமக்குக் கிடைத்த பதவிகளை ஒருபோதும் அவர் தமது புகழுக்காக பயன்படுத்தவில்லை. அதேபோன்று தமக்குக் கிடைத்த வரப்பிரசாதகங்களை நிராகரித்த ஒரு நபர் என்பதும் இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அதேபோன்று கியூபாவை பிரதிநிதித்துவம் செய்து ஐநா சபையின் உச்சி மாநாட்டில் கலந்துகொண்டு ஐக்கிய அமெரிக்காவின் மிலேச்சத்தனத்தை சுட்டிக்காட்டியதோடு மூன்றாம் உலக நாடுகள் ஏகாதிபத்திய நாடுகளின் பிடியிலிருந்து மீண்டு தமது விடுதலையைப் பெற்றுக் கொள்வதை அதில் நியாயப்படுத்தி உரையாற்றினார். இங்கு பல மூன்றாம் உலக நாடுகளின் மதிப்பையும் ஆதரவையும் அவர் பெற்றுக்கொண்டார்.


பிற்காலத்தில் 1965 காலகட்டத்தில் தமது பதவிகளை இராஜினாமா செய்த அவர் உண்மையான சர்வதேசியவாதியாக உலகில் ஒடுக்கப்பட்ட, நசுக்கப்பட்ட சாதாரண மக்களின் விடுதலைக்காகப் போராட வேண்டுமென்ற குறிக்கோளுடன் போராட்ட களத்துக்கு அவர் சென்றார். இவ்வாறு கொங்கோ போராட்ட குழுக்களுக்கு ஆயுத பயிற்சி அளிப்பதற்காக பொலீவியாவுக்குச் சென்று அவர்களுடன் களத்தில் போராடிக்கொண்டிருக்கும் நிலையில் பொலீவிய முதலாளித்துவ இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு 1967 ஒக்டோபர் 08ம் திகதி அவர் உயிர்நீத்தாலும் உலகளவில் இளம் சமுதாயத்தினரின் உள்ளங்களில் அன்றைய காலகட்டத்தை விட இன்று பரவலாகப் பதிந்துள்ளார். அன்று பிறந்திருக்காத இளம் சமுதயாயத்தினர் கூட இன்று "சே"அவர்களைப்பற்றி ஆராய்கிறார்கள். அவர்களது உள்ளங்களில் குடியிருக்கிறார்.

எமது நாட்டிலும் நாம் முகம்கொடுக்கும் இந்த அநீதியான சமதாய முறையை மாற்றியமைத்து இங்கு வாழும் தமிழ், முஸ்லிம், சிங்களம் மக்கள் எவ்வித வேறுபாடின்றி தத்தமது தனித்துவங்களுக்கும், உரிமைகளுக்கும் மதிப்பளிக்கும் சமுதாயமுறையை வென்றெடுக்கும் பயணத்துக்கு உயிரூட்டும் மக்கள் விடுதலை முன்னணியும் அதன் இளைஞர் அணியான சோஷலிச இளைஞர் சங்கமும் ஒக்டோபர் 08ம் திகதி சே ஞாபகார்த்தத்தை நடாத்துவதோடு அதற்கு அப்பாற்சென்று "சே" அவர்கள் எதிர்பார்த்துப் போராடிய சமுதாய முறையை கொண்டுவரும் பயணத்துடனும் ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டத்துடனும் ஒன்றிணையும் படி இந்நாட்டு தமிழ், முஸ்லிம், சிங்களம் இளம் சமுதாயத்தினரிடம் தோழமையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

# வெளிவாரிப் பட்டப்படிப்பு துண்டிப்புக்கு எதிராகப் போராடுவோம்!

எமது நாட்டு இளைஞர், யுவதிகள் பல்வேறு கனவுகளை சுமந்தக்கொண்டே வாழ்ந்து வருகிறார்கள். அதில் கல்வி கற்பதென்பது அதன் பிரதான கனவாகும். ஏனென்றால் கல்வி கற்று சிறந்த பெறுபேறுகளை எடுத்தால் மட்டுமே சிறந்ததொரு தொழில்வாய்ப்பை பெற்றுகொள்ளலாம் என்ற கனவிலேயே உள்ளார்கள். ஒவ்வொரு வருடமும் ஏறத்தால 2,50,000 பேர் உயர்தர பரீட்சைக்கு முகம்கொடுக்கிறார்கள். இதில் சுமார் 1,50,000 உயர்தரம் சித்தியடைந்தாலும் சுமார் 25,000பேருக்கு மட்டுமே பல்கலைக்கழக வசதிகள் கிடைக்கின்றது. ஆகவே சுமார் 1,25,000பேருக்கு பல்கலைக்கழக சந்தர்ப்பம் கிடைக்காத படியால் கேட்போர் அற்ற நிலைக்கு தள்ளப்படுவதால் அவர்களுள் சிலர் வெளிவாரி பட்டப்படிப்புக்காக முயற்சிக்கிறார்கள்.

எமது நாட்டு ஆட்சியாளர்களின் கல்விக் கொள்கை தொடர்பான செயற்பாடுகள் காரணமாக இவர்களின் கனவும் இன்று சிதைந்து வருகின்றது. இத்துண்டிப்புகள் எமது நாட்டில் பல வருடங்களுக்கு முன்பிருந்தே செயற்படுத்தி வருகின்றார்கள். அதன் ஆரம்பக் கட்டமாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் ஆட்சிகாலத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. அதாவது 2010-2014 காலகட்டத்தில் வெளிவாரி பட்டதாரிகளைச் சேர்த்துக் கொள்வது முற்றாக நிறுத்தப்பட்டது. ஆனால் அதற்கு எதிராக மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வித்துறையின் முற்போக்காளர்கள் உள்ளிட்ட சோஷலிச மாணவர் சங்கம், சோஷலிச இளைஞர் சங்கம் போராடியதன் விளைவாக மீண்டும் 2014ம் ஆண்டு இப்படநெறி பல கட்டுப்பாடுகளுக்கு



தொடர்ச்சி 11ம் பக்கம்...

# அரசாங்கத்திற்கு எதிராக கொழும்பில் போராட்டம் நடத்த தீர்மானம்

தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் கேட்டும் கேட்காமலும் இருக்கும் அரசாங்கத்தின் எதேர்ச்சியான போக்குக்கு தலைநகர் கொழும்பில் போராட்டம் நடத்த மக்கள் அணிதிரட்டலின் மூலம் தீர்மானம் நடைபெறும். இதற்காக ஏகமானதான முடிவு நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதமர் மற்றும் ஜனாதிபதி ஆகியோரின் வாசஸ்தலத்திற்கு முன்னால் இப்போராட்டம் அழுத்தம் கொடுக்கும் வகையில் அமைவதற்கு தொழிலாளர்கள் அனைவரும் அணிதிரள வேண்டும்.

கலப்பின சம்பள .முறையை தோற்கடித்து மாத சம்பள முறை மற்றும் வீட்டுரிமையை வென்றெடுப்பதற்காக தோட்டத் தொழிலாளர்களை அணிதிரட்டுவோம் என்ற தொனிப்பொருளில் நடத்தப்பட்ட ஹற்றன் மாநாட்டில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய தேசிய தொழிற்சங்க மத்திய நிலைய தலைவரும் ஜே.வி.பி யின் நிர்வாக குழு உறுப்பினருமான கே.டி.லால் காந்த,

இந்த தீர்மானத்தை 25.09.2016 அன்று ஹற்றனில் நடைபெற ஜே.வி. பி யின் தொழிச்சங்கமான அகில இலங்கை தோட்டதொழிலாளர் சங்கத்தின் 10வது மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் இங்கு மேலும் தெரிவித்ததாவது, தேயிலை, தென்னை, இறப்பர் என வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து நாட்டின் தேசிய வருவாயை உயர்த்திய இந்த நாடு தற்பொழுது வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்கு அம்மா, அக்கா, தங்கை என பெண்களை அனுப்பிவைத்து வருமானம் தேடுகின்றது.

தோட்ட தொழிலாளர்களின் சம்பள உடன்படிக்கை 2 வருடங்களுக்கு ஒருமுறை ஒப்பந்தம் செய்யப்பட வேண்டும் ஆனால் இம்முறை 17 மாதங்கள் கடந்தும் கைச்சாத்திடப்படவில்லை.



தோட்டத்தொழிலாளர்களின் வாழ்வாதார கோரிக்கையை கேலிக்கூத்தாக சில மலையக தொழிற்சங்க மற்றும் அரசியல் வாதிகள் கொண்டு செல்கின்றார்கள்.

ஐ.தே.க அரசாங்க தரப்பில் தொழிற்சங்கமாக இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் வடிவேலு சுரேஸ், இ.தொ.க வில் ஆறுமுகம் தொண்டமான் முதலாளிமாருடன் கேலிக்கூத்தாடும் நிலையில் அதற்கு அப்பால் தமிழ் முற்போக்கு கூட்டணி உறுப்பினர்களையும் கூத்தாடி வருகின்றனர்.

தொழிலாளியாக தொடர்ந்தும் இருப்பதா அல்லது இதிலிருந்து வெளியேறுவதா என்ற நிலைக்கு ஆளாகியுள்ள நிலையில் ஜே.வி. பி தோட்ட தொழிலாளர்களை திறந்த தொழில் முறைக்கு கொண்டுச்செல்வதற்கு போராட்டங்களை முன்னெடுக்கும்.

8 மணிநேர வேலை வேண்டுமென உலகலாவிய ரீதியில் சட்டம் இருந்தாலும் மேதினம் கொண்டாடினாலும் இலங்கையில் 8 மணி நேர வேலைக்கு மேல் தொழில் செய்கின்றனர்.

இதை யாராலும் மாற்றமுடிகின்றதா..? ஆனால் தொழிலாளர்களை பொறுத்தவரையில் 8 மணி நேர வேலை தினம் வேண்டும் என்று கேட்கின்றார்கள்.

தொழிலாளர்கள் உழைப்பை சுரண்டி வாழும் தொழிற்சங்கம் மற்றும் முதலாளிமார் சம்மேளனம் இவர்களின் உரிமைகளை பெற்றுக்கொடுப்பதில்லை. அதேபோன்று வாக்குகளை பெற்ற அரசாங்கத்தின் இரண்டு பிரதான கட்சிகளும் அவ்வாறே செயல்படுகின்றன.

தொழிலாளர்கள் 15 இலட்சம் பேர்இருக்கின்றார்கள். இதில் 2 இலட்சம் தோட்டத்தொழிலாளர்களில் வேதனை கோரிக்கை கேட்காமல் காதடைத்தவர்களை போல் இருப்பவர்களுக்கு காது கேட்க கையால் அடிக்காமல் போராட்டத்தால் அடிக்கவேண்டும்.

தேயிலை தொழில் தவிர்ந்த ஏனைய தொழில்களை செய்வோரின் வாழ்க்கை உயரும்பொழுது தோட்ட தொழிலாளர்களின் வாழ்க்கை பின்தள்ளப்பட்டு வருகின்றது.

வெளிநாட்டில் பெற்ற கடனுக்கு வட்டி கட்ட பணமில்லதா நிலையில் முன்னால் ஆட்சியை ஜே.வி. பி குறைக் கூறிவருவதைப்போல் ஜனாதிபதியும் கூறுகிறார். ஆக ஜனாதிபதி ஜே.வி.பி உடன் இணைந்துவிட்டாரா என கேள்வி எழுப்பினர்.

கடன் சுமை மூட்டையை மக்கள் மீது சுமத்திவிட்டு வற் வரியையும் சுமத்திவிட்டு கிடைக்கும் சம்பளத்தை குறைத்து குறைவான சம்பளத்தில் வேலை செய்ய தொழிலாளர்களை இறக்குமதி செய்வது தொடர்பில் இந்தியாவுடன் எட்கா உடன்படிக்கை செய்யப்போகின்றார்கள்.

இதற்கு பதிலடி தர அனைவரும் ஒன்றிணைந்து கட்சி பேதமற்று புதிய போராட்டம் ஒன்றை முன்னெடுக்க தலைநகர் கொழும்புக்கு அணிதிரள வேண்டும் என இதன்போது தெரிவித்தார்.

# அரசியல் தொழிற்சங்கவாதிகளே மலையக மக்களுக்கு துரோகமிழைக்கின்றனர்




மலைகய அரசியல் தொழிற்சங்கவாதிகளே மலையக மக்களுக்கு துரோகமிழித்து வருகின்றனர். இவர்களின் சுயநலவாதச் சிந்தனைகளின் வேரூன்றல் காரணமாக இம்மக்களின் அபிவிருத்தி பல மட்டங்களிலும் தடைப்பட்டு வருகின்றது என்று மக்கள் விடுதலை முன்னணியின் மத்திய குழு உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகம் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் மலையக மக்களின் வரலாறு இன்று 200வருடங்களை அண்மித்துள்ளது. இந்தக்கால கட்டத்தில் இவர்கள் பல்வேறு சவால்களுக்கு துன்ப துயரங்களுக்கும் முகம்கொடுத்து உள்ளார்கள். மலையக மக்களின் வரலாறு மிகவும் கசப்பான தன்மை கொண்டதாகவும் காணப்படுகின்றது. நாட்டின் அபிவிருத்திக்காக உதிரத்தை சிந்தி உழைத்திருக்கின்றார்கள். இலங்கையின் மொத்த தேசிய வருமானத்தில் கணிசமான வகியபாகத்தினை இவர்கள் கொண்டிருக்கிறார்கள். எனினும் இம்மக்களின் வாழ்க்கைநிலையானது குறிப்பிடத்தக்க எழுச்சி காணாமால் பின்தங்கிய நிலையிலேயே காணப்படுகின்றது. சகல துறைகளிலும் இப்பின்னடைவு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தோட்டப்புற இளைஞர், யுவதிகள் நகர்ப் புறங்களில் அடிமை நிலையில் தொழில் புரிந்து வருகின்றமையான துர்பாக்காயிமான நிலையும் இப்போது மேலெழுந்து காணப்படுகின்றது. இந்நிலையில் மலையக மக்களின் வாழ்வில் மறுமலச்சியையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்தப் போகின்றோம் என்று கூறி இம்மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி அரசியல் களம் புகுந்தவர்கள் தத்தமது வாழ்க்கையில் மறுமலசிரியையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்திக் கொண்டார்களே தவிர மலையக மக்களின் நலன் கருதி கிஞ்சித்தும் செயற்படவில்லை என்பதே கசப்பான உண்மையாகும். தொழிற்சங்கங்களும் இதற்கு விதிவிலக்கல்ல, மலையக தொழில்ரசங்கவாதிகளும் உரியவாறு தமது பணியினை முன்னெடுக்கவில்லை. தமது பையையும் வயிற்றையும் நிரப்பிக் கொள்வதிலேயே இவர்கள் குறியாக இருந்தனர். மலையக அரசியல்வாதிகள் தங்களது வியாபாரங்களை சுதந்திரமாகச் செய்வதற்கு வாய்ப்பாக அரசியல் பிரதிநிதித்துவத்தினை பயன்படுத்திக் கொண்டார்கள் என்பதற்கு வரலாறு சான்று கூறுவதாக அமையும்.

அன்றைய அரசியல் தொழிற்சங்கவாதிகளும் சரி இன்றைய அரசியல் தொழிற்சங்கவாதிகளும் சரி எல்லோருமே ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான். மலையக

தொடர்ச்சி 11ம் பக்கம்...

# இலங்கையின் முதலாவது ஆயுதப் போராட்டம் ஆரம்பம்!

## ஒரு பிரளயத்தின் தோற்றம்

தோழர் ரோகண விஜேவீர கைது செய்யப்பட்டதுடன், கட்சி பாரிய நெருக்கடியைச் சந்தித்தது. கட்சியின் ஒருமைப்பாடு சீர்குழைந்தது. தோழர்கள் மத்தியில் பல்வேறு வகையான எண்ணங்கள் தோன்றின. அடக்குமுறை அதிகரித்ததன் காரணமாக தற்காப்புகாக எதிர்தாக்குதல் நடத்த வேண்டுமென்ற எண்ணம் சிலர் மத்தியில் தோன்றிது. அதற்குப் புறம்பாக சமூக புரட்சியை ஆழமாக புரிந்துக்கொள்ள முடியாத, தாக்குதல் தொடுத்து அதிகாரத்தை கைபற்ற வேண்டுமென ஆவலை கொண்டிருந்தவர்கள் தாக்குதலை நடத்துவதற்கான அக்கறையைக் காட்டினர். அப்போது பதுளை மா வட்டச் செயலாளராக இருந்த சுநன்த தேசப்பிரிய அவ்வகையைச் சேர்ந்தவராவார். யார் இல்லாவிட்டாலும் பதுளையில் தாம் தாக்கபோவதா குறிப்பிட்டிருந்தார். மறுபுறத்தில் லொக்கு அத்துல அதை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டார். தோழர் விஜேவீர கைதுசெய்யப்பட்டு அவரது தலைமைத்துவமும் வழிகாட்டலும் கட்சிக்கு கிடைக்காத இச்சந்தர்ப்த்தை பயன்படுத்தி கட்சியின் அதிகாரத்தையும் நாட்டின் அதிகாரத்தையும் தாம் கைபற்றுவதற்காக லொக்கு அத்துல நினைத்திருந்தது தெரிய வருகிறது. அதன் கரணமாக அவர் தமக்கு ஆதரவானவர்களுடன் கலந்துரையாடி அவசரமான தாக்குதலுக்குத் தயாரானார். பல தோழர்கள் மத்தியில் நிலவிய தாக்குதலுக்கான அக்கறையை லொக்கு அத்துல தமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார். அவ்வேளையில் யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தோழர் ரோகண வீஜேவீராவை பார்ப்பதற்காக விஜேவீரவின் தாயாரும் தோழர் ஒஸ்மனின் தாயாரான தோழி சீலாவத்தியும் யாழ்ப்பாணத்திற்குச் சென்றனர். அங்கு அவர்கள் விஷேட அனுமதியுடன் தோழர் விஜேவீராவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். ஒஸ்மனின் தாயாரிடம் தோழர் விஜேவீர சில முக்கியமான விடயங்களைக் குறிப்பிட்டு அவற்றைக் கட்சி தோழர்களிடம் தெரிவிக்கும்படி கேட்டிருந்தார். பிற்காலத்தில் அவர் அதை உறுதிபடுத்தியவாறு தோழர் விஜேவீர பின்வரும் ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

அவை பின்வருமாறும்:-

■ அடக்குமுறைக்கு எதிராகவும் அதுபற்றி மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக துண்டுப்பிரசுர

■ விநியோகம், போன்று வேறு பல பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்தல்,

■ பாதுகாப்புக் கருதி முழுநேர உறுப்பினர்கள் பிரதேசங்களை மாற்றுதல்,

■ மற்றும் அடக்குமுறை அதிகரித்துள்ள இடங்களிலிருந்து பின்வாங்கல்,

தோழர் விஜேவீராவை விடுதலை செய்வதற்காக தமக்கு சார்பான சட்டதட்தரணிகளைச் சந்தித்து சட்ட நடவடிக்கைகளை எடுத்தல்,

போன்ற விடயங்களை தோழர் விஜேவீர தெரிவித்துள்ளார். அந்த ஆலோசனைகளுக்கு ஏற்ப தோழி சீலாவத்தி (ஒஸ்மனின் தாய்) சட்ட உதவியைப் பெறுவதற்காக சட்டதரணி எட்மன்ட் சமரக்கொடியைச் சந்தித்துள்ளார். அதை லொக்கு அத்துலவிடமும் தெரிவித்துள்ளார். ஆனால், அவற்றைப் பொருடப்படுத்தாத லொக்கு அத்துல இந்த நிலைமைகளைப் பயன்படுத்திக் கொண்டு துரிதமான தாக்குதலுக்குத் தயாரானார்.

இதேவேளையில் அரசாங்கமும் இந்த நிலைமைகளைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு



அடக்குமுறையை உக்கிரப்படுத்தியது. 1971 மார்ச் 16ஆம் திகதி அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தின் கீழ் விஷேட சட்டங்கள் சிலவற்றை அமுல்படுத்தியது. அதாவது, மரண விசாரணையின்றி சடலங்களை அழிக்கும் சட்டமும் அதிலடங்கும். அதுவொரு பாரிய நகர்வென்பதால் அதன் மூலமாக அரசாங்கம் இளைஞர்களை அழித்தொழிக்கும் நடவடிக்கையின் ஆரம்பமாக கருதலாம். ஏனென்றால் மரண விசாரணையின்றி சடலங்களை அழிப்பதற்கு மனித சடலங்கள் இருக்கவில்லை. இது 1965 இந்துனீசிய எதிர் புரட்சிவாதிகள் இராணுவ சதிபுரட்சியின் மூலமாக படுகொலைகளை நினைவூட்டுவதாக இருந்தது. இவை அனைத்தும் ஆயுத எழுச்சியைத் தடுப்பதற்கான திசையை நோக்கியதல்ல அவை உருவாக்கும் திசையை நோக்கிய நகர்வுகளாகவே அமைந்திருந்தன.

உலகத்தில் எந்தவொரு பிரபலமான அரசியல் நிகழ்வுகள் பற்றியும், போராட்டத்தைப் பற்றியும், ஆராய்ந்துப் பார்க்கும்போது தெரியவருவது, அது மிகவும் சிக்கலான செயற்பாட்டின் விளைவாக இடம்பெற்றவைகளாகும். 1971 போராட்டத்திற்கும் இந்த உண்மை பொருத்தமானதாகும். அது தனிப்பட்டச் சம்பவங்களாக எளிமையாக புரிந்து கொள்ளமுடியாதது. 1971 போராட்டத்தின் உண்மையான காரணமாக நிலவிய உள்ளக முரண்பாடு, சந்தர்ப்பவாதத்தின் தோற்றம், புரிதலற்ற அதிகமான மனோவியலின் தோற்றம் போன்ற விடயங்கள் அதனை ஊக்கமளித்தது. அதனால் போராட்டத்தின் தோற்றமானது தனிநபர்களின் முரண்பாடுகள் மற்றும் துரோகங்களைப் புரிந்துக்கொள்வதுடன், ஆயுதமேந்திய போராட்டத்திற்கு தள்ளிய அனுபவங்களையும் ஆளும் வர்க்கத்தின் எதிர்புரட்சிவாத எதிர்புரட்சிகள் மூலமாக அழித்தொழிக்கப்படும்போது தாங்களின் சுய பாதுகாப்புக்காகவும் போராட முடியாமல் அழிந்து போனமையைப் பற்றி வரலாறு பாடம் புகட்டியுள்ளது. அதற்கு நல்ல உதாரணம் இந்துனீசியாகும். 1966ல் ஜெனரல் சுகர்த்தோவின் வழிநடத்தலில் இடம்பெற்ற இராணுவ சதிப்புரட்சியின் மூலம் இந்துனேசிய கம்பியூனிஸ்ட் கட்சி ஜனநாயக ரீதியாக செயற்பட்டுக் கொண்டிருந்த வேளைகளில் அரச அடக்குமுறைக்கு எதிராக சுயபாதுகாப்புக்காக ஆயுதமேந்துவதற்கு ஜே.வி.பியை வலியுறுத்தியது அந்த அனுபவமாகும்.

எவ்வாறாயினும் 1971 மார்ச் 13ம் திகதி தோழர் வீஜேவீர கைது செய்யப்பட்டு அவசரநிலையின் கீழ் தடுத்து வைத்திருந்ததோடு கட்சிக்குக் கிடைத்த தலைமைத்துவம் பலவீனமானதும் கட்சியினால் தோன்றியிருந்த சந்தர்ப்பவாத கும்பலுக்கு இது தங்களது குறிக்கோளை அடைவதற்கு நல்ல சந்தர்ப்பமாக அமைந்ததும் அதற்கிணங்க லொக்கு அத்துல உள்ளிட்ட கும்பல் இந்த நிலைமைகளை தங்களின் குறுகிய நோக்கிற்காக பயன்படுத்தியதுடன் அரசாங்கமும் தமது அடக்குமுறையைத் தொடர்ச்சியாக உக்கிரமாக்கியது.

பொய்யான கருத்தியல் என்னவெனில் அரசாங்கத்தால் ஜே.வி. பி.அடக்கப்பட்டது 71 எழுச்சிக்கு பின்னர் என்பதாகும். ஆனால் உண்மை அதுவல்ல ஏப்ரல் எழுச்சிக்கு முன்னர் அரசாங்கத்தால் கட்சிக்கு எதிராக கடுமையான அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டு தொடர்ச்சியாக அதை தீவிரபடுத்தியதிலிருந்தும் மார்ச் 13ம் திகதி தோழர் விஜேவீர எதுவிதமான குற்றச்சாட்டுக்களுமின்றி கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்து வைத்திருந்தமையானது அடக்குமுறையில் ஒரு சந்தர்ப்பமாக அமைவதுடன் அதன் பின்னரும் அடக்குமுறை தொடர்ந்தது.

சுயபாதுகாப்பின் நிமித்தமாக ஆயுதமேந்தி தாக்குவதற்காக கட்சியினால் முடிவினை எடுப்பதற்கு லொக்கு அத்துல உள்ளிட்ட கும்பலுக்கு இந்த நிலைமைகள் இலகுவாக்கியது.

1971 மார்ச் 16ம் திகதி அரசாங்கம் மக்கள் பாதுகாப்புச் சட்டத்தில் சில மோசமான சரத்துக்களை நடைமுறைபடுத்தி மரண விசாரணையின்றி சடலங்களை அழிக்கும் சட்டத்தையும் நிறைவேற்றியது பற்றி நாம் முன்னர் குறிப்பிட்டிருந்தோம். அரசாங்கம் அத்துடன் நிற்கவில்லை. 1971 ஆகஸ்ட். 12ம் திகதி பாதுகாப்பு அமைச்சின் நிரந்தர செயலாளர் ஆத்தர் ராஜ்குமார் ரத்னவேல் குறிப்பிட்டது போன்றே ஜே.வி.பியைப் பூண்டோடு அழிப்பதற்காக அரச இயந்திரம் ஜே.வி.பி.யை பின்தொடர்ந்து வந்துகொண்டிருந்ததும். அது பற்றி அப்போதைய பத்திரிகைகளில் வெளியான அறிக்கையில் அதை புரிந்துகொள்ளமுடியும்.

■ 1971மார்ச் 18 எதிர்வரும் சில நாட்களில் கிளர்ச்சி இயக்கத்தின் தலைவர்கள் அனைவரையும் கைது செய்வதற்க பொலிசுக்கு முடியும்□

■ 1971 மார்ச் 20 கைது செய்யப்பட்டவர்களின் தொகை 120 என செய்தி திணைக்களம் அறிவித்ததும் முதலாவது தீவைப்பு (பாதுகாப்பு படைகளால்) மாத்தறை மாரவில பிரதேசத்தில் இடம்பெற்றது.

■ 1971 மார்ச் 27 இதுவரை 300 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தகவல் திணைக்களம் அறிவித்ததும். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களின் பலர் எதுவிதமான குற்றச்சாட்டுகளுமின்றி கைது செய்யப்பட்டவர்களாவர்.

■ அதே தினத்தில் வித்தியோதய வித்தியாலங்காதர மண்டபம் சோதனையிடப்பட்டது.

■ 1971 மார்ச் 30 375 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். 1971 ஏப்ரல் 01ம் திகதி கைது செய்யப்பட்டிருந்தவர்களின் தொகை 410 ஆகும்.

■ பாதுகாப்பும் படைகள் சேகுவேரா இயக்கத்தை முடக்கி விட்டதாக பாதுகாப்புச் சபை பிரதமருக்கு அறிவித்ததாக டெயிலி நியூஸ் பத்திரிகை அறிவித்தது.

இவ்வாறு அடக்குமுறை நிகழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் லொக்கு அத்துல உள்ளிட்ட கும்பல் ஆயுத எழுச்சிக்கான திகதியைத் தீர்மானித்திருந்தது. கிடைத்திருக்கும் தகவலின்படி 1971 மார்ச் 30 ஏப்ரல் 05 அதிகாலையில் தாக்குதல் நடத்துவதற்கான முடிவினை எடுத்திருந்தனர். ஆனால் கட்சியின் மற்றவர்களையும் இணைத்துக் கொள்ளாது இத்தாக்குதலை வெற்றிகரமாக்க முடியாதென லொக்கு அத்துல புரிந்து கொண்டிருந்தார். அக்காலத்தில் முக்கியமான பல மாவட்டங்களில் தலைமைத் தாங்கிய மாவட்ட செயலாளர்கள் லொக்கு அத்துலவின் அணியில் சேர்ந்திருக்கவில்லை. விசேடமாக கொழும்பு மாவட்டச் செயலாளராக அப்போது செயற்பட்ட லயன்ல் போபகே, அப்போது “கண்டி வீதி” எனும் பெயரில் இருந்த பேலியகொடை பிரதேச தலைவரான ஜே.உயன்கொட, மாத்தறை மாவட்டச் செயலாளர் சுசில் விக்ரம போன்ற முக்கிய தலைவர்கள் லொக்கு அத்துலவின் “குழுவுக்கு” தொடர்பில்லாத கட்சியுடன் இருந்த தலைவர்களாவர். தாம் எடுத்த முடிவுக்கு இவர்களையும் இணைத்துக் கொள்வது அத்தியாவசியம் என்பதால், அதன் நிமிர்த்தமாக லொக்கு அத்துலவினால் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அது ஜே.வி.பியின் வரலாற்றில் மிகவும் தீர்மானகரமான கலந்துரையாடலாகும்.

தொடரும்...

05ம் பக்கம் தொடர்ச்சி..

## கூட்டு அரசாங்கத்தின்...

அதிகாரமே கிடைத்திருக்கிறது. ஜனாதிபதி பதவி ஸ்ரீ.ல.சு.க தலைவரிடம். அமைச்சரவையில் அரைவாசி அவர்களிடமே உள்ளது. மாகாண சபைகளும் ஐ.தே. கவிடம் இல்லை. உள்ளூராட்சி சபைகள் கலைக்கப்பட்டுள்ளன. கீழ்மட்ட ஆதிக்கம் ஐ.தே.கவிடம் இல்லை. அதனால் ஐ.தே.க தலைவர்கள் அதிகாரத்தை அனுபவித்துக் கொண்டிருந்தபோதிலும், அடிமட்ட மக்களின் ஆதரவு ஐ.தே. கவிடம் இல்லை. முன்னர் தனி அரசாங்கம் அமைக்கின்றபோது அடிமட்டம் வரையில் அதிகாரம் கட்டியெழுப்ப முடியாததினால் ஐ.தேக உறுப்பினர்கள் பாரிய அதிருப்தியடைந்திருக்கின்றனர். ரணில் பிரதமராக இருந்தபோதிலும் ஐ.தே.க உறுப்பினர் ஒருவர் தொழில் ஒன்றைப் பெற்றுக் கொள்ளக் கூட முடியாத நிலை தோன்றியுள்ளதென ஐ.தே.க உறுப்பினர் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். அரசாங்கம் மாறியதுடன் ஐ.தே.கவினருக்குத் தொழில் வழங்கும் இ.போ.ச, துறைமுகம், பெற்றோலியக் கூட்டுதாபனம், சமூர்த்தி போன்ற அமைச்சுக்கள் ஸ்ரீ.ல.சு.க வசமே இருக்கிறது. ஐ.தே.க உறுப்பினர்கள் கீழ் மட்ட அதிகாரம் கிடைக்கவில்லையென நினைப்பது அதனாலேயாகும். இவ்வாறு கீழ் மட்ட உறுப்பினர்கள் மத்தியில் எழுகின்ற எதிர்ப்பு ஐ.தே.க தலைவர்கள் விளங்கிக்கொள்ள ஆரம்பித்துள்ளது. வருடாந்த விழாவை நடத்தி ரணில் ஐ.தே.க அங்கத்தவர்களுக்கு உறுதியளிப்பது கீழ்மட்ட உறுப்பினர்களின் எதிர்ப்பினைத் தணிப்பதற்காகும். ஆனால் அதேபோன்று அரசாங்கத்தின் இருப்பினைப் பற்றி அவர் தெரிவிக்கும் கருத்துக்கள் முரண்பாட்டைத் தணிப்பதற்கு அவருக்கு வேறு வழியில்லை. அவர் இன்று எதிர்கொண்டிருக்கு நிலைமை அதுவாகும்.

அரசாங்கத்தினுள் ஏற்பட்டுள்ள முரண்பாடானது ஐ.தே.க-ஸ்ரீ.ல.சு.க முரண்பாட்டுடன் மட்டும் வரையறுக்கப்பட வில்லை. இந்த அரசாங்கத்தில் மேலும் பல முரண்பாடுகள் உள்ளன. இதன்போது அதிகாரப்பகிர்வை ஏற்றுக்கொண்டு 13க்கு அப்பால் சென்று அதிகாரத்தைப் பகிர வேண்டுமெனக் கூறும் நபர்களைப் போன்றே (ஐ.தே.க, டிலான் பெரேரா போன்ற) அதிகாரப் பகிர்வை எதிர்க்கும் ஹெல உறுமயவும் உள்ளனர். தற்போதைய கூட்டு அரசாங்கம் இந்தியாவுக்கும் மேற்குலக அழுத்தத்திற்கும் ஏற்றவாறு செயற்படும்போதும் புதிய அரசியலமைப்பை நிறைவேற்றுவதற்குத் தயாராகும்போதும் ஹெல உறுமயவின் இருப்பும் கேள்விக்குறியாகவும் சவாலுக்கும் உள்ளாகிறது. அப்போது அவர்களுக்கும் ஏற்பட்டடிருப்பது அரசாங்கத்தினுள் இருந்து அனைத்திற்கும் ஆதரவளித்து வருகின்ற வேளையில் தமது அமைச்சின் அதிகாரத்தைப் பயன்னபடுத்தி ஆட்களைக் கொழும்பிற்கு கொண்டுவந்து மாநட்டை நடத்தி தேசப்பறறைப் பற்றிப் பிதற்றும் நிலை தோன்றியுள்ளது.

இவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஆட்சி நடத்திக்கொண்டு தனிதனியாக மாநாடுகளை நடத்தி, தம்மைக் கைவிட்டுச் செல்லும் அங்கத்தவர்களுக்கு எதிர்காலக் கனவுகளைக் காட்டிக் சிறிது நாட்களுக்கேனும் தம்முடம் தக்கவைத்துக் கொள்வதற்கே அன்றி வேறு ஒன்றுமே கிடையாது.

எவ்வாறாயினும் இக்காரணிகளால் அரசாங்கத்தின் இருப்பை நலிவடையச் செய்து அராஜக நிலைக்குத் தள்ளப்பட்டு வருவதுடன் தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராகப் புதிய மாற்றுச் சக்திக்கான புறநிலைக்காரணிகளும் அரசியல் சந்தர்ப்பமும் மென்மேலும் விரிவடைந்து வருகிறது. அந்தச் சந்தர்ப்பததைக் கைபற்றுவதற்கு ஐ.தே. கவுக்கோ ஸ்ரீ.ல.சு.கட்சிக்கோ ஏனைய சிறு குழுக்களுக்கோ தகைமை கிடையாது. அதற்கான சந்தர்ப்பம் இருப்பது, இடதுசாரித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட முற்போக்குச் சக்திகளுக்காகும். இந்த கூட்டு அரசாங்கத்தில் ஸ்ரீ.ல.சு.கட்சிக்கோ ஐ.தே. கவுக்கோ தனியாக அதிகாரத்தை பெற்றுக் கொள்ள முடியாது போன பலவீனத்தின் காரணத்தினாலாகும். இதை நாம் முதலிலும் சுட்டிக்காட்டினோம். "இரண்டு முட்டாள்தனம் ஒரு புத்தியுள்ளதாக அமையாது" என்னும் ஒரு கதை உள்ளது. அதனால் இரண்டு பலவீனங்கள் ஒன்றாகச் சேரும்போது ஒரு பலமுள்ளதாக அமையப்போவதுமில்லை. பலவீனங்கள் இருமடங்காவது உறுதியாகும்.

09ம் பக்கம் தொடர்ச்சி..

## அரசியல் தொழில் சங்க வாதிகளே...

மக்களுக்கு துரோகமிழைப்பதற்கு யாரும் புதிதாக வந்துவிடல்லை. மலையக அரசியல் தொழிற்சங்கவாதிகளே இம் மக்களுக்கு துரோகமிழைத்து வருகின்றனர். இம் மக்களை அதலபாதாளத்தில் தள்ளிவிடும் ஏமாற்றுக்காரர்களாக, பச்சோந்திகளாக இவர்களே இருந்து வருகின்றனர். இவர்களாலேயே மலையகம் இன்று சீரழிந்து, சீர்குலைந்து காணப்படுகின்றது. மக்களைக் கூறுபோட்டு குளிர்காய்வது என்பது இவர்களுக்கு கைவந்த கலையாக உள்ளது. மலையக அரசியல் தொழிற்சங்கவாதிகள் தங்களது மடியை நிறைத்துக் கொள்வதற்காக அரசியல் செய்கின்றார்கள். 180 வருடத்துக்கும் மேலாக இன்னும் இது தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது.மலையக மக்களின் வாழ்க்கையில் அபிவிருத்தியை ஏற்படுத்த ஒரு ஆக்கபூர்வமான வேலைத்திட்டமோ கொள்கையோ இவர்களுக்குக் கிடையாது. அரசாங்கத்துக்கு மலையக மக்களின் அபிவிருத்தி கருதி எந்தவிதமான கொள்கையும் இல்லாத நிலையில் மலையக அரசியல்வாதிகளுக்கும் கொள்கை இல்லாத நிலையே காணப்படுகின்றது. சுதந்திரத்துக்குப் பின்னர் உருவான அனைத்து அரசாங்கங்களாலும் வஞ்சிக்கப்பட்ட, ஏமாற்றப்பட்ட மக்களாகவே மலையக மக்கள் இருந்து வருகின்றமை புதிய விடயமல்ல. ஏமாற்ற நிலையில் இருந்து விடுபடுவதற்கு புதிய திசை-யினை நோக்கி தொழிலாளர்கள் அணிதிரள வேண்டும்.சம்பள விடயத்தில் தொழிலாளர்கள் ஏமாற்றப்பட்டுள்ளார்கள். அரசியல்வாதிகளின் கையாலாகாத தனமே இதன்மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தொழிலாளர்களின் பிரச்சினைக்கான தீர்வு போராட்டத்தை தவிர வேறொன்-றில்லை. தொழிலாளர்கள் வர்க்க ரீதியாக அணிதிரள வேண்டும். தொழிலாளர் வர்க்கத்தின் குரலாக, உழைக்கும் மக்களின் குரலாக இன்று மக்கள் விடுதலை முன்னணி இருந்து வருகின்-றது. முன்னணியின் தொழிற்சங்கங்களும் இந்த இலக்கினை நோக்கியே செயற்படுகின்றன. தொழிலாளர்களுக்கு பல்வேறு உரிமைகளையும் நாம் பெற்றுக் கொடுத்துள்ளோம். பாதுகாப்பும் வழங்கி இருக்கின்றோம். வர்க்க ரீதியான அரசியலை முன்னிலைப்படுத்தி மக்கள் விடுதலை முன்னணி அரசியல் செய்கினறது.தொழிலாளர் வர்க்கம் வர்க்க ரீதியாகஒன்றுபட வேண்டும். தொழிலாளர் வர்க்கத் தின் உரிமைகளை வென்றெடுத்தவர்கள் முதலாளி வர்க்கமல்ல. தொழிலாளர் வர்க்கத்தை பிரதிநிதித்துவம் செய்த தலைமை களாலேயே உரிமைகள் பெற்றுக்கொடுக் கப்பட்டுள்ளன.

02ம் பக்கம் தொடர்ச்சி..

## ரணில் மைத்திரி அரசாங்கம்...

சுங்கம் வரியை மட்டும் தேடித்தரும் நிறுவனமல்ல. சட்டவிரோத பொருட்கள் நாட்டுக்குள் வருவதையும், தொல்பொருள் பெறுமதியுள்ள, பொருட்கள் நாட்டிலிருந்து வெளியே கொண்டு செல்வதையும் தடுக்கிறது. அதனால் சுங்கச் சட்டம் சக்திமிக்கதாக இருத்தல் வேண்டும். 1969ல் நிறைவேற்றப்பட்ட பலம்பொருந்திய சுங்க சட்டம் எமது நாட்டில் உள்ளது. அதை தான் இப்போது திருத்தப்படவுள்ளது. சுங்கத்தின் உயர் பதவி சுங்கப் பணிப்பாளர் ஜெனராலாகும். அவருக்கு மேலதிகமாக ஐந்து அதிகாரிகள் உள்ளனர். புதிய சட்டமூலத்தின்படி மேலதிக பணிப்பாளர் ஜெனரால்கள் ஆறு பேர் நியமிக்கவுள்ளதுடன், அதில் மூவர் அமைச்சரவையால் நியமிக்கப்படவுள்ளனர். அதன்மூலமாக அரசியல் தலையீடு அதிகரிக்கப்பட்டுள்ளது.

நிதியமைச்சருக்கு சுங்க விசாரணையின்றி அவசர தேவையின் அடிப்படையில் பொருட்களை விடுவிப்பதற்காக புதிய சட்டத்தில் இடமுள்ளது. குற்றவாளிகளுக்கான தண்டனை தளர்த்தப்படவுள்ளது. தற்போதைய சட்டத்தின்படி பொருட்களை கொண்டுவரும் ஒருவர் சுங்கத்தை ஏமாற்றினால் பொருட்களின் பெறுமதியைப் போன்று மும்மடங்கு அபராதம் விதிக்க முடியும். ஆனால் புதிய சட்டத்தின்படி பெறுமதியின் 50 வீதம் மட்டுமே அறவிடப்படவுள்ளது. இந்த அரசாங்கம் கள்வர்களுக்கு உதவி செய்கிறது. சட்டவிரோத பொருட்கள் கொண்டுவரும் நபர் அபராதத்தை மட்டும் செலுத்திவிட்டு குற்றத தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியும். நமது நாட்டுச் சட்டத்தின்படி இரண்டு கிராமிற்கு அதிகமாக ஹெரோயின் வைத்திருந்தால் அவருக்கு மரண தண்டனை அளிக்க முடியும். ஆனால் புதிய சட்டத்தின்படி 193.'.2 சரத்தின்படி போதைப்பொருளின் ஹெரோயின் போன்ற தடைசெயய்ப்பட்டப் பொருள், இராணுவத் தளபாடங்கள், குண்டுகள் கொண்டவரப்பட்டால் உயர்ந்த பட்ச தண்டனையாக ஆறு மாத சிறைத்தண்டனையாகும். அபராதம் உயர்ந்தபட்டம் ஐம்பது இலட்சமாகும். புதிய சுங்கச் சட்டத்தின் கீழ் அரசாங்கம் கள்வர்களுக்கு சட்டத்தின் ஓட்டையை மேலும் பெரிதாக்கியுள்ளது. ஆகவே, இது கள்வர்களைப் பாதுகாக்கின்ற நல்லாட்சியாகும்:

08ம் பக்கம் தொடர்ச்சி..

## வெளிவாரிப் பட்டப் படிப்பு...

மத்தியில் ஆரம்பிக்கப்பட்டது. அதாவது 6000 ரூபாவாக இருந்த கட்டணம் 72,000 ரூபாவரை உயர்தப்பட்டது. அவ்வாறான நிலையிலும் மாணவர்கள் கல்வி கற்க செயற்பட்டாலும் இன்றைய ரணில் - மைத்திரி கூட்டரசாங்கத்தின் நடவடிக்கைகள் இதனை இன்னும் வரையறுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். அண்மையில் களனி பல்கலைக்கழகத்தில் வெளியிட்ட ஓர் ஆலோசனை அறிக்கையில் குறிப்பிட்டிருந்தது, பல்கலைக்கழகத்திற்கு உள்வாரி பட்டப்படிப்புக்காக எவ்வளவு மாணவர்கள் இருக்கின்றார்களோ அதே அளவுக்கு மட்டுமே வெளிவாரி பட்டத்துக்காக சேர்த்துக்கொள்ளப்படும். அதாவது 1000 மாணவர்கள் உள்வாரி பட்டப் படிப்பு கற்பதானால் வெளிவாரி பட்டத்துக்காகவும் 1000 மாணவர்களே சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்றாகும்.

ஆனால் அரசு தமது நயவஞ்சகத் தன்மையை மூடிமறைத்துக் கொள்வதற்காக "அரச பல்கலைக்கழகங்களில் இருந்து ஒரு வருடத்துக்கு வெளியாகும் பட்டதாரிகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குவதற்கு எதிர்பார்க்கிறோம்" என்று தெரிவித்தார்கள். பார்வைக்கு இது வரவேற்கத்தக்கதாக இருந்தாலும் இது உண்மையல்ல. உண்மை என்னவெனில், களனி பல்கலைக்கழகத்திற்கு வெளிவாரி பட்டப்படிப்புக்காக 2006ம் ஆண்டில் 11,082 பேர் விண்ணப்பித்திருந்தாலும் அதில் 1158பேர் மட்டுமே பட்டம் பெற்றுக்கொண்டார்கள். 2007ம் ஆண்டில் 13,959 பேர் விண்ணப்பிருந்தாலும் அதில் 2057பேர் மட்டுமே பட்டம் பெற்றுக்கொண்டார்கள். 2008ம் ஆண்டில் 12,656பேர் விண்ணப்பிருந்தாலும் அதில் 3518பேர் மட்டுமே பட்டம் பெற்றுக்கொண்டார்கள். 2009ம் ஆண்டில் 16,704பேர் விண்ணப்பிருந்தாலும் அதில் 2100பேர் மட்டுமே பட்டம் பெற்றுக்கொண்டார்கள். 2010ம் ஆண்டில் 15400 பேர் விண்ணப்பிருந்தாலும் அதில் 1994பேர் மட்டுமே பட்டம் பெற்றுக்கொண்டார்கள். அதாவது பதிவாளர்களில் 10சதவீதமானர்களுக்கு மட்டுமே பட்டம் பெற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. எனவே இதற்கேற்பு 2014ம் ஆண்டில் 14,000பேர் விண்ணப்பித்திருந்தாலும் 2160பேருக்கு மட்டுமே பட்டம் படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

பட்டதாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமானால் வெளிவாரி பட்டத்துக்காப் பதிவுசெய்வதைத் துண்டிப்பது தீர்வாகாது. கல்வித்துறைக்கு 6சதவீத்தை ஒதுக்கும் கொள்கையை ஏற்று இளைஞர், யுவதிகளின் கல்வியுரிமை பாதுகாக்கப்படும் என வாக்குறுதியளித்து பதவியேற்ற அரசாங்கம் இவ்வாறான துண்டிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

# விற்றலும் பலிகொடுத்தலும்



எமது நாட்டு பொருளாதாரத் துறை பாரிய நெருக்கடிக்குள் சிக்கியுள்ளதாகவும் அதிலும் நிதித்துறை பாரியதொரு இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது எனவும் அரச தரப்பினரே தெரிவிக்கின்றனர். இதிலிருந்து மீளுவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பதிலாக கடந்த மகிந்த அரசை விமர்சித்து வருவதோடு அதே கொள்கைகளை மேற்கொண்டு மீண்டும் கடன்பொறிக்குள் நாட்டை இழுத்துச் செல்வதற்கும், மறுபுறம் தனியார்மயம் என்ற பெயரில் அரச நிறுவனங்களையும், நிதித்துறையையும் வெளிநாடுகளுக்கு தரைவார்ப்பதற்கு இன்றைய கூட்டரசாங்கம் திட்டமிட்டு வருகின்றது. இன்று தொழில்வாய்ப்பின்மை எமது நாட்டில் பாரியதொரு பிரச்சினையாகும். எனவே எட்கா ஒப்பந்தம் கைச்சாத்திட்டால் மிதமிஞ்சியிருக்கும் தொழில்வாய்ப்புகளும் இந்தியாவிற்கு இரை யாக்கும் வகையிலேயே எட்கா ஒப்பந்தம் தீட்டப்பட்டுள்ளது. மறுபுறம் இன்று தகவல் தொழில் நுட்பத் துறை உலகளவில் எடுத்துக்கொண்டாலும் எமது நாட்டில் எடுத்துக்கொண்டாலும் மிக வேகமாக வளர்ந்து வரும் ஒருதுறையாக இருக்கின்றது. அன்றாட வாழ்க்கைத் தே வைகளை இலகுவாக்கிக்கொள்வதற்கு தக வல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி இன்றி யமையாததாகும். இத்துறையின் அதிகாரத்தை இந்தியா தம்வசப் படுத்திக்கொள்ளும் அச்சுறுத்தலே எட்கா ஒப்பந்தத்தில் உள்ள மறைமுக நோக்கமாக உள்ளது.

அதேபோன்று இன்றைய கூட்டரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைகளுக்கேற்ப தனியார்மயத்தின் பேரில் அரச நிறுவனங்களை துட்டுக்கு இரண்டாக விற்பதை ஆரம்பித்துள்ளது. அந்த வகையில் எயார் லங்கா விமானச் சேவை, கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு இறங்குதுறை, மத்தல விமான நிலையம், அம்பாந்தோட்டை துறைமுகம், லங்கா ஹொஸ்பிடல் நிறுவனம், பெற்றோலிய கூட்டுத்தாபனம், மின்சார சபை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபை, விமான நிலைய மற்றும் விமானச் சேவை நிறுவனம், மற்றும் துறைமுக அதிகார சபை போன்றவற்றை "உட்கட்டமைப்பு . மாற்றம்" என்ற திரைமறைவில் தாரைவார்ப்பதற்கு அரசு தயாதராகவுள்ளது.

இவ்விடயங்களை கருத்தில் கொண்டு இந்நாட்டில் தமிழ், முஸ்லிம், சிங்கள அனைத்து மக்களும் எதிர்காலத்தில் பாதிப்புகளுக்கு முகம்கொடுக்க வேண்டிவரும் என்பதனாலும் இன்றைய கூட்டரசாங்கம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை மீறிச் செயற்படுகின்றபடியாலும், இது தொடர்பாக பொது மக்களை அறிவுருத்தும் நோக்கில், "விற்றல், பலிகொடுத்தல் மற்றும் எட்கா" என்ற தொணிப்பொருளில் கருத்தரங்குகளை நாடலாவிய மட்டத்தில் நடாத்துவதற்கு மக்கள் விடுதலை முன்னணி திட்டமிட்டது. இதன் ஆரம்ப கருத்தரங்கு கடந்த 20ம் திகதி கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் அநுர திசாநாயக்கவின் தலைமையில் நடாத்தப்பட்டது.

## நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு வழங்க முடியாத கூட்டரசாங்கம்!

### மக்கள் விடுதலை முன்னணியின் பா.உ. தோழர் விஜித ஹேரத்




பாராளுமன்ற உறுப்பினர் தோழர் விஜித ஹேரத் இக்கருத்துக்களை கடந்த 16ம் திகதி மக்கள் விடுதலை முன்னணியின் தலைமையகத்தில் ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் மாநாட்டில் போது தெரிவித்தார். அதில் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

வரவு-செலவு திட்டம் கொண்டுவரும் சந்தர்ப்பத்தில் சர்வதேச நாணய நிதியத்திலிருந்து கடன் பொற்றுகொள்ளும் நோக்கில் அரசு வற்வரி சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்பித்தது. இதனூடாக நாடு இன்று முகம்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு தர்க்க ரீதியான நடவடிக்கைகள் இன்றைய கூட்டரசாங்கத்திடமும் இல்லை என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் தோழர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இப்போது இரண்டு கட்சியும் இணைந்து நாட்டை கட்டியெழுப்புவோம் என்று கூறும் அதேவேளை ஐ.தே.கட்சியும், ஸ்ரீ.ல.சு.கட்சியும் தத்தமது மாநாடுகளில் கருத்துவெளியிடும்போது 2020ல் தமது கட்சி தனியாக ஆட்சி அமைப்போம் என்று குரலெழுப்புகின்றது. இப்போது ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்ப முடியுமென்றால் 2020ல் ஏன் தனியாக ஆட்சியை அமைக்க வேண்டும் என்று அந்த இரண்டு கட்சிகளிடமும் நாம் கேட்க விரும்புகிறோம்.

ஸ்ரீ.ல.சு.கட்சி அமைச்சர்கள் வெளியில் இருந்து கொண்டு வற்வரி சட்டமூலத்துக்கு தமது எதிர்ப்பை காட்டினாலும், அமைச்சரவையில் அதற்கு ஆதரவளித்துள்ளார்கள். வெளியே வந்து எதிர்ப்பை காட்டுவது பொதுமக்களை ஏமாற்றுவதற்காகும். கொண்டுவரப்பட்ட வற்வரி சட்டமூலத்தில் பல குறைபாடுகள் இருந்த படியால் அதற்கு திருத்தங்களை செய்வோம் என ஸ்ரீ.ல.சு.கட்சி அமைச்சர்கள் கூறினார்கள். அவர்கள் உண்மையர்கவே இதற்கு எதிர்ப்பு தெரிவிக்க தயாரென்றால், பாராளுமன்றத்தில் இதற்கு எதிராக வாக்களித்து காட்டுங்கள் என்று நாம் அவர்களிடம் கேட்கிறோம்.



யாழ் மக்களை சந்தித்து உரையாடல்



கியூபத் தூதுவருடன் SYU கலந்துரையாடல்



LEFT வலைத்தளம் திறப்பு விழாவில்



கிளிநொச்சி அமைப்பாளர் தோழர் சி. இராசேந்திரம்



யாழ் மாவட்ட இளைஞர் அணித்தலைவர் தோழர் நேசன்



சோ.இ.சங்கம் அங்கத்தவர்கள் போர்த்துக்கேய இளைஞர்களுடன்



சோஷலிச இளைஞர் சங்க ஒன்றுகூடலில்

பத்தரமுள்ள, பெலவத்த, பன்னிபிட்டிய வீதி,464/20ல் வசிக்கும், எம். ரில்வின் சில்வா ஆகிய நான் இலக்கம் 43/20, நுககஹ பிளேஸ், பிலியந்தலை வீதி, மகரகமவில் அமைந்த நியமுவா வெளியீடு நிறுவனத்தில் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.